வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 05.04.2023 புதன்கிழமை இதழ் : 117 பக்கங்கள் : 16

# சிவ தோஷம் குல நாசம் இலங்கைக்கும் அதேகதி!

## சபையில் சாடினார் சிறிதரன் எம்.பி.

யாழ்ப்பாணம், பெப்ரவரி 05

**இனவாதத்தின் உச்சம் தமிழர்களின் மத உரிமைகளையும் விட்டுவைக்கவில்லை. சிவ தோசம் - குல நாசம் என்ற வாக்குக்கு அதிக பலம் உள்ளது. சிவன்மீது கைவைக்கப்பட்டுள்ளது.**

**ஆகவே இந்த நாடு நாசத்தை நோக்கிச் செல்லும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்தார்.** 15



## மாமன் தாக்கியதில் மருமகன் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஏப். 05

மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதையடுத்து மண்வெட்டிப் பிடியால் மாமனார் தாக்கியதில் மருமகன் உயிரிழந்தார்.

கிளிநொச்சி - கிருஷ்ணபுரம் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம்பிள்ளை துஷ்யந்தன் (வயது 34) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த நபர் குடும்ப முரண்பாடு காரணமாக மனைவியை பிரிந்து வாழ்ந்துள்ளார். இந்த நிலையில், நேற்று காலை அவர் மனைவியிடம் பேசுவதற்காக அவரின் தந்தையின் வீட்டுக்கு சென்றுள்ளார்.

அந்தச் சமயம் அவரின் மாமனாருக்கும் 15

## சஜித் அணி பிளவுபட்டது!

கொழும்பு, ஏப். 05

எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் அணிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது.

அந்த அணியைச் சேர்ந்த மூவர் ஜனாதிபதி ரணிலுடன் இணைந்து 15

## ரூ. 2500 கோடி வரியாக வசூல்!

கொழும்பு, ஏப். 05

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மட்டும் தனிநபர் வருமான வரியாக 2 ஆயிரத்து 557 கோடியே 70 இலட்சம் ரூபாயை உள்நாட்டு வருவாய் திணைக்களம் வசூலித்துள்ளது.

இதன்படி, கடந்த ஜனவரி 15



## தம்பாட்டியில் கடற்படைக்கு காணி; எதிர்ப்பால் அளவீடு கைவிடப்பட்டது!

யாழ்ப்பாணம், ஏப். 05

ஊர்காவல்துறை - தம்பாட்டியில் கடற்படை முகாம் அமைப்பதற்கான காணி சுவீகரிப்பு நடவடிக்கை பொது மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

தம்பாட்டி பகுதியில் கடற்படை முகாமுக்கு நிரந்தரமாக அமைக்க காணி சுவீகரிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று அந்தப் பகுதி மக்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாரந்தனை வடக்கு ஜே/56 தம்பாட்டியில் உள்ள இறங்குதுறையில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமுக்கு நிரந்தரமாக காணியை சுவீகரிக்கும் நோக்கில் இரகசியமாக அளவீடு முன்னெடுக்கப்பட்டது. இதனை அறிந்த அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். 15

## பெரமுன வேட்பாளராக ரணிலை நிறுத்தும் யோசனை ஏதுமில்லை!

### அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 05

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை முன்னிறுத்துவது தொடர்பில் இதுவரை எந்தவொரு யோசனையும் முன்வைக்கப்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 15

## புதிய பயங்கரவாத சட்டத்தினால் ஆபத்தெனில் ஆதரிக்கமாட்டோம்

### திட்டவட்டமாக அறிவித்தது பெரமுன

கொழும்பு, ஏப். 05

"மக்களின் பாதுகாப்பு, ஊடக பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமொன்று அவசியம். அதற்கேற்ற வகையிலேயே புதிய சட்டம் அமையுமென நம்புகின்றேன். மக்களின் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலெனில் அதனை பொதுஜன பெரமுன கட்சி ஆதரிக்காது."

- இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் 15

## மாங்குளம் சிறுமி வன்புணர்வு குற்றவாளிக்கு 10 வருட கடூழியம்!

### வவுனியா மேல் நீதிமன்று தீர்ப்பு

வவுனியா, ஏப். 05

முல்லைத்தீவு - மாங்குளம் பகுதியில் 16 வயது சிறுமியை வன்புணர்ந்தவருக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறையும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 இலட்சம் ரூபாய் நட்டஈடு செலுத்துமாறும் - தவறும்பட்சத்தில் மேலும் இரு ஆண்டுகள் கடூழிய சிறை வாசமும் விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் நேற்றுத் தீர்ப்பளித்தார்.

கடந்த 2012 பெப்ரவரி மாதம் மாங்குளம் பகுதியில் இந்தக் குற்றச்செயல் இடம்பெற்றிருந்தது.

இதன்போது, சிறுமியை அவரின் தந்தையின் சகோதரியின் கணவர் (மாமா) வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். இதன் மூலம் சிறுமி கர்ப்பம் தரித்து குழந்தை ஒன்றையும் பிரசவித்துள்ளார். இந்த வழக்கில் மரபணு பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் குற்றவாளியின் குற்றம் நிரூபிக்கப்பட்டது. (ஐ)

நாவலர் மண்டப விவகாரம்

## ஆளுநரின் உத்தரவுக்கு நீதிமன்று இடைத்தடை!

யாழ்ப்பாணம், ஏப். 05

நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து யாழ். மாநகர சபையை வெளியேற்றி இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளிக்கும் பணிப்புக்கு யாழ். மேல் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு விதித்துள்ளது.

இந்த வழக்கு 15

## "அடுத்த ஜனாதிபதியாக ரணிலே வரவேண்டும்!"

கொழும்பு, ஏப். 05

அடுத்த ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவே வரவேண்டும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் கருதுகின்றனர் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இந்த விடயம் 15

எரிபொருள் விநியோகம்

## சீனா, அவுஸ்திரேலியா, அமெரிக்க நிறுவனங்களுடன் உடன்படிக்கை!

கொழும்பு, ஏப். 05

நாட்டில் பெற்றோலிய இறக்குமதி, விநியோகம் மற்றும் களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகளை சீன, அவுஸ்திரேலிய மற்றும் அமெரிக்க நிறுவனங்கள் ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தம் எதிர்வரும் 3 வாரங்களுக்குள் கையெழுத்திடப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அதற்கமைய சீனாவின் சினொபெக், அவுஸ்திரேலியாவின் யுனைடட் பெற்றோலியம், அமெரிக்காவின் ஆர்.எம். பார்க்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு எரி பொருள் விநியோக சந்தையில் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அனுமதி வழங்க கடந்த மார்ச் 27ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இந்நிலையிலேயே குறித்த நிறுவனங்கள் எதிர்வரும் 3 வாரங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொள்ளப் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## மாமன்...

(மனைவியின் தந்தை) அவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. வாய்த்தர்க்கம் கைகலப்பான நிலையில், மாமனார் மருமகனை மண்வெட்டி பிடியால் தாக்கியுள்ளார்.

இதில் படுகாயமடைந்தவர் உடனடியாக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவரின் மாமனார் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சஜித்...

கொள்ளவுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

ஹர்ஷ டி சில்வா, ஏரான் விக்ரமரத்ன மற்றும் கபீர் ஹாசீம் ஆகியோரே இவ்வாறு அரசு டன் இணையவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

## 2500...

மாதத்தில் 310 கோடியே 60 இலட்சம் ரூபாயும், பெப்ரவரி மாதத்தில் ஆயிரத்து 54 கோடி ரூபாயும், மார்ச் மாதத்தில் ஆயிரத்து 193 கோடியே 10 இலட்சம் ரூபாயும் வரியாக அறவிடப்பட்டுள்ளன என்று இறைவரி ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஐ)

## தம்பாட்டியில்...

காணியை அளப்பதற்காக அங்கு சென்ற நில அளவைத் திணைக்களத்தின் வாகனத்தை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

இதன்போது போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு வந்த கடற்படையினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை படம் பிடித்துச் சென்றிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது. (ஐ)

## பெரமுன...

நாட்டின் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளதால், நாட்டைக் கட்டியெழுப்பும் பணியை நேர்மையாகவும், துணிச்சலாகவும் செய்யக்கூடிய தலைவராக விளங்குகின்றார்.

மேலும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரை வேட்பாளராக எதிர்பார்ப்பதில் தவறில்லை.

நாட்டை வீழ்ச்சியடைந்த இடத்தில் இருந்து சாதகமான திசைக்கு கொண்டு செல்லும் பணியை செய்துள்ளார்

பொதுஜன பெரமுன இது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றவில்லை. ஆனால் இந்த நேரத்தில் கட்சி மற்றும் நாட்டுக்கு விசுவாசமான எவருக்கும் முக்கிய சவாலான பணி நாட்டை கட்டியெழுப்புவதாக இருக்கவேண்டும். மேலும் ரணில் விக்கிரமசிங்க தனது ஆதரவை வென்றுள்ளார். எனவே, நாட்டுக்கு நல்லது நடக்கும் என்று நம்பிக்கை வைப்பதில் தவறில்லை-என்றார். (அ)

## சிவதோஷம் குலநாசம்...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மீதான கட்டளைச் சட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா வெடுக்குநாறி காட்டுப்பகுதியில் தமிழர்கள் பாரம்பரியமாக வழிபட்டு வந்த ஆதிலிங்கேஸ்வர ஆலயத்தின் சிவலிங்கங்கள் விக்கிரகங்கள் உடைத்தெறியப்பட்டுள்ளன.

அம்மன் விக்கிரகத்தின் கழுத்துப் பகுதி வெட்டப்பட்டு வீசியெறியும் அளவுக்கு இந்த நாட்டில் இனவாதம் மேலோங்கியுள்ளது.

ஓர் இனத்தினர் காலம் காலமாக கடைப்பிடித்த மத நம்பிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்து செல்கிறதே தவிர குறைவடையவில்லை.தமிழர்களின் இருப்பும்,சைவத்தின் இருப்பும் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுவது கவலைக்குரியது.

முல்லைத்தீவு குருந்தூர்மலைப் பகுதியில் இருந்து சிவ சின்னங்கள்,சூலம் மற்றும் சிவலிங்கம் பெரும்பான்மை சமூகத்தால் அழிக்கப்பட்டது.

குருந்தூர் மலையில் விகாரை நிர்மாணிக்கும் பணிகளுக்கு முல்லைத்தீவு மாவட்டம் பல தடவைகள் தடை உத்தரவு பிறப்பித்தும், நீதிமன்றத்தை மதிக்காமல் விகாரை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தெற்கில் மாத்திரமே நீதிமன்றங்கள் சுயாதீனமாகவும், தைரியமாகவும் செயற்படுகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் பிறப்பிக்கும் உத்தரவை எவரும் குறிப்பாக பெரும்பான்மை தரப்பினர் மதிப்பதும் இல்லை - செயற்படுத்துவதுமில்லை.

வவுனியா வெடுக்குநாறி பகுதியில் தமிழர்கள் 1957 ஆம் ஆண்டு காலமும் சிவ வழிபாட்டில் ஈடுபடுகிறார்கள். இந்தப் பகுதி தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இல்லை. அத்துடன் தொல்பொருள் அளவையியல் வரைபுக்குள் உள்வாங்கப்படவில்லை,இவ்வாறான பின்னணியில் இந்துக்களின் மத உரிமைகளுக்கு தொல்பொருள் திணைக்களம் இடையூறு விளைவிப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

இனவாதம் மற்றும் பௌத்தவாதம் பற்றி மேலோங்கி கருத்துரைக்கின்ற தரப்பினர் தான் ஆதிலிங்கேஷ்வரர் ஆலயத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளார்கள்.

தமிழர்களின் காணி உரிமையும் பறிக்கப்படுகிறது. மத உரிமைகளும் பறிக்கப்படுகின்றன.

‘சிவன் தோசம் - குல நாசம்’ என்ற வாக்குக்கு இந்துக்கள் மத்தியில் அதிக நம்பிக்கை உள்ளது.சிவன் தலையில் கை வைக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த நாடு நாசத்தை நோக்கி செல்லும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது.

உள்ளக பொறிமுறை ஊடாக தீர்வு காண்பதாக சர்வதேசத்துக்கு பொய்யுரைத்து விட்டு,பன்னாட்டையும் ஏமாற்றும் செயற்பாடுகள் மாத்திரம் முன்னெடுக்கப்படுகின்றன.

உடைக்கப்பட்ட சிவலிங்கம் மற்றும் விக்கிரகங்களை மீள் அமைப்பதாக இரு அமைச்சர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடுக்குநாறி பகுதிக்கு விஜயம் செய்தார்கள்.இந்த விவகாரம் சட்ட விசாரணைக்கு உட்பட்டுள்ளது. ஆகவே சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுவிட்டு திரும்பி விட்டார்கள்.

உடைக்கப்பட்ட சிலைகள் மற்றும் சிவலிங்கத்தை மீள் அமைப்பதற்கு எவ்வித சட்ட தடைகளும் காணப்படவில்லை. உண்மையில் இந்த அமைச்சர்கள் ஆடையுடன் திரிகிறார்களா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கௌதாரிமுனை பகுதியில் 100 ஹக்கர் காணி இறால் பண்ணை செய்கைக்காக அளக்கப்படுகிறது. 3700 ஆண்டு காலமாக கௌதாரிமுனை பகுதியில் வாழும் தமிழர்கள் இந்தச் செயற்பாட்டுக்கு கடுமையாக எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

தமிழர்களின் பூர்வீக காணிகளைச் சுவிகரித்து சிங்கள குடியேற்றத்தை அமைக்கும் அரசாங்கத்தின் நோக்கத்திற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் துணை செல்வது கவலைக்குரியது - என்றார். (அ)

# கிளிநொச்சியில் வீடொன்றுக்கு தீ வைத்த இனந்தெரியாதோர்!

கிளிநொச்சி, ஏப். 05

கிளிநொச்சி - உருத்திரபுரம் பகுதியில் அடையாளம் தெரியாத சில நபர்களால் வீடு ஒன்று தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வீட்டின் பிரதான வாயில் வாளினால் வெட்டப்பட்டுள்ளதாகவும் வீடு மற்றும் சொத்துக்கள் எரிந்து நாசமடைந்துள்ளதாவும் கூறப்படுகின்றது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரின் வீடே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளதாக பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ)

# சிங்களவர் இனப்படுகொலையாளர் என்பது தமிழர்களின் சித்திரிப்பாம்!

## சரத் வீரசேகர எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஏப். 05

நாட்டில் இனப்பிரச்னை உள்ளது என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால், நாட்டில் இனப்பிரச்னை என்பது கிடையாது. தமிழ் அரசியல்வாதிகளே இனப்பிரச்னை என்று கூறிக்கொண்டு சிங்களவர்களை இனப்படுகொலையாளர்கள் என சித்தரிக்கிறார்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை உரையாற்றுகை யில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

இனங்களை முன்னிலைப்படுத்தி ஒரு தரப்பினர் பாராளுமன்றத்தில் ஆற்றும் பொய்யான உரை வெட்கக்கேடானது. நாட்டுக்குள் இனவாத முரண்பாடுகள் தோற்றம் பெற்றால் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. வடுகங்கலை பகுதியில் உள்ள சிவன் கோயிலை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் அரசியல் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த சின்னங்கள் அழிக்கப்பட்டு இந்து கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான செயல்பாடுகளால்தான் இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறும் குருந்தூர் மலையில் பழமைவாய்ந்த பௌத்த மரபுரிமைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பௌத்த வழிபாடுகளுக்கும் தமிழ் அரசியல் தரப்பினர் தடை ஏற்படுத்தியுள்ளார்கள்.

தேரவாத பௌத்த கொள்கையை பாதுகாக்கும் ஒரு நாடாக இலங்கை உள்ளது. ஆகவே பௌத்த மரபுரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்டு. இலங்கை சிங்கள - பௌத்த நாடு என்பதை எவராலும் மறுக்க முடியாது. - என்றார். (ஐ)

## ஆளுநரின்...

நேற்று யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

அண்மையில், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா, யாழ். மாநகர சபையை நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து வெளியேறுமாறும் அதனை மத்திய அரசின் ஆளுகையின் கீழுள்ள இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளிக்குமாறும் உத்தரவிட்டார்.

அவரின் இந்த உத்தரவுக்கு சவால் விடுத்து, யாழ்ப்பாணம் மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ. பார்த்தீபன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் வழக்கு தொடுத்தார். அவரின் சார்பில் யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி. மணிவண்ணன் இந்த வழக்கில் வாதாடினார்.

இந்த வழக்கிலேயே மேல் நீதிமன்றம் ஆளுநரின் கட்டளைக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஐ)

## புதிய...

எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களின் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு, ஊடகங்களின் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தக்கூடிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்று அவசியமென்ற நிலைப்பாட்டிலேயே எமது கட்சி இருக்கின்றது.

புதிய பயங்கரவாத தடைச்சட்ட மூலத்தின் உள்ளடக்கங்கள் எனக்கு தெரியாது. அது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறுகின்றது. ஜே.வி.பி. உட்பட பயங்கரவாதச் செயலில் ஈடுபட எத்தனிக்கும் நபர்களுக்கு இத்தகைய சட்டம் வலிக்கும். அத்தகையவர்களே போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன - என்றார். (அ)

## அடுத்த...

தொடர்பில் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் கலந்துரையாடப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடுத்து என்ன தேர்தல் நடத்துவது என்பது நிச்சயமற்றது ,தேர்தல் நேரத்தில் பொதுஜன பெரமுன பொருத்தமான தீர்மானத்தை எடுக்கும் - என்றார். (அ)

## சீனா...

படவுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் விநியோகத்திற்கு 3 வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கல் தொடர்பில் எதிர்வரும் 3 வாரங்களுக்குள் ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது. குறித்த 3 நிறுவனங்களுக்கும் தலா 150 வீதம் எரிபொருள் நிரப்பும் நிலையங்களை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

எமக்கு உரிமம் உள்ள 234 எரிபொருள் நிரப்பும் நிலையங்களை தவிர்த்தே , மேற்கூறப்பட்ட நிறுவனங்களினால் மேலதிக எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. இவற்றில் எமக்கு உரித்து காணப்படாது. மாறாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களால் அவை நிர்வகிக்கப்படும்.

இந்நிறுவனங்களுக்கும் எரிபொருள் விலை சூத்திரம் பொறுந்தும். விலை சூத்திரத்திற்கமைய அரசாங்கத்தினால் எரிபொருள் விலை தீர்மானிக்கப்படும். ஏனைய அனைத்து நடவடிக்கைகளும் அவற்றால் சுயாதீனமாக முன்னெடுக்கப்படும். பெற்றோலிய கூட்டுத்தாபனமும் அதன் அடிப்படையில் தற்போதும் சுயாதீன நிறுவனமாகவே செயற்பட்டு வருகிறது-என்றார். (அ)

## இப்படியும் நடக்கிறது...!

இலங்கை இடதுசாரிகளின் வரலாறு எழுதப்படுமானால் அதில் கார்த்திகேசன் மாஸ்டரின் பெயரைத் தவிர்த்துவிட்டு யாரும் எழுதமுடியாது.

பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த காலத்திலேயே இடதுசாரி அரசியலில் நாட்டம் கொண்டு செயல்பட்டவர். லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து எஸ். ஏ. விக்கிரமசிங்க, பீட்டர் கெனமன் போன்றோர் வெளியேறி கம்யூனிஸ்ட் கட்சியை ஆரம்பித்தபோது அவர்களுடன் சேர்ந்து இயங்கியவர் கார்த்திகேசன் மாஸ்டர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் பணியாற்றிய கார்த்திகேசன் மாஸ்டர், நல்ல நகைச்சுவை பேச்சாளர். அந்தக் காலத்தில் 'சிரித்திரன்' என்ற சஞ்சிகையில் வெளிவந்த பல நகைச்சுவைத் துணுக்குகள் காத்திகேசன் மாஸ்டரிடமிருந்து சுட்டவைதான்.

அந்தக் காலத்தில் கொழும்புக்கு பயணம் என்றால் அது ரயில் பயணம்தான். யாழ்ப்பாணத்திலிருந்து இரவு மெயில் ரயிலில் கொழும்பு செல்கின்றவர்கள் காங்கேசன் துறையிலிருந்து, ரயில் பெட்டிகளின் இருக்கைகளில் முழுமையாக படுத்துவிடுவர்கள். மற்றைய பயணிகள் பற்றிய கவலை எல்லாம் அவர்களுக்கு இருக்காது. ஆனால், அநுராதபுரத்தில் ஏறும் சிங்கள பயணிகளைக் கண்டதும் திடுக்கிட்டு எழும்பி அமைதியாக ஒரு மூலையில் கூனிக்குறுகி அமர்ந்துவிடுவர்கள்.

அரசியல் ரீதியாக தமிழ் மக்கள் தமது அரசியல் தலைவர்கள் செய்கின்ற எந்த விடயங்களையும் கண்டு கொள்வதில்லை. அதனால் தமிழ் மக்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறப்படுவதுண்டு.

சிரித்திரன் சஞ்சிகையில் அட்டைப்பட நகைச்சுவைச் சித்திரம் ஒன்று, 'தூங்கிக் கொண்டிருக்கின்ற தமிழர்கள் எப்போது விழித்துக்கொள்வார்கள்' என்று கேட்க, அதற்கு மற்றவர் சொல்லுவார், "ரயில் அநுராதபுரம் போய்ச் சேரும் போது" என்று.

இப்படி பல நகைச்சுவைகளின் சொந்தக்காரர் கார்த்திகேசன் மாஸ்டர்தான்.

அண்மையில், தந்தை செல்வாவின் பிறந்தநாள் வைபவத்திற்காக மலையகத்திலிருந்து மூத்த இடதுசாரி செயல்பாட்டாளர் பெ. முத்துலிங்கம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரை சில நண்பர்கள் சந்தித்தபோது, பழைய அரசியல் விடயங்கள் குறித்து நீண்டநேரம் உரையாட முடிந்தது. வடக்கு - கிழக்கில் தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தபோது, அவர்கள் அடைய நினைக்கும் தமிழீழத் திலாவது சிவப்பு கொடியை பறக்க விடவேண்டும் என்ற சிந்தனையில், அதாவது தமது இடதுசாரி கொள்கையை தமிழீழத்திலாவது அடைந்துவிட வேண்டும் என்பதற்காக அவர் போன்ற சிலர் மலையகத்திலிருந்து தமிழீழ இயக்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்தினர். அவ்வாறு அவர்கள் தொடர்பை ஏற்படுத்தியபோது அவர்களுடன் சேர்ந்து இயங்க விரும்பி இணைந்து கொண்டவர் பத்மநாபா. அதனால்தான் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் அதிதீவிர இடதுசாரி கொள்கையுடன் பயணித்தது.

பத்மநாபா போன்ற தலைவர்கள் மலையகத்தில் ஆற்றிய அரசியல் பணிகள் பற்றி நீண்டநேரம் அவர் பல்வேறு விடயங்களையும் இரைமீட்டுக்கொண்டிருந்தார்.

அப்போது எமது பேச்சு தற்போதைய பதின்மூன்று பற்றி திரும்பியபோது, அதன் அவசியத்தை அவரும் வலியுறுத்தினார்.

பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவதற்கே இந்தியா முதல் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை வரை பல்வேறு தரப்பிலிருந்தும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோதிலும் அரச தரப்பு அதனை செய்ய முடியாமல் இருப்பதற்கு சிங்கள பேரினவாதம்தான் காரணம் என்று விளக்கமளித்த அவர், திரும்பிக் கேட்டார், இதுவே இத்தனை இழுபறியாக இருக்கும்போது, நமது தலைவர்கள் சமஷ்டி கோரிக்கைதான் தீர்வு என்று கூறிக்கொண்டிருப்பது எதனால் என்று.

அதற்கு நம்மோடு இருந்த மற்றுமொரு யாழ்ப்பாண மூத்த இடதுசாரி தோழர் ஒருவர், காத்திகேசன் மாஸ்டரின் நகைச்சுவை ஒன்றை சொன்னார்.

அப்போது தமிழ்த் தேசிய அரசியலில் பெரும்பாலும் சட்டத்தரணிகளே இருந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமாகி தமிழீழம்தான் தீர்வு என்று அறிவித்தபோது, "அடைய முடியாத தீர்வு ஒன்றை எப்படி இவர்கள் அடைவார்கள்", என்று காத்திகேசன் மாஸ்டரிடம் ஒருவர் கேட்டபோது அவர் சொன்னாராம்,

'அதை அடையத் தேவையில்லை, எமது சட்டத்தரணிகள் நீதிமன்றில் வழக்குக்கு தவணை எடுப்பதுபோல தமிழீழம் அடைவதையும் தவணை எடுத்துக்கொண்டே இருப்பார்கள்தானே' என்று.

அப்போதுதான் புரிந்தது நமது சட்டத்தரணி அரசியல்வாதிகள் சிலர் சமஷ்டிதான் தீர்வு என்பது தவணை எடுத்துக்கொண்டே இருக்கலாம் என்ற நம்பிக்கையில்தான் என்பது.

- ஊர்க்குருவி

# பைக்கெற் பால் நஞ்சானதால் 12 சிறுவர்கள் மருத்துவமனையில்!

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஏப். 05

கிளிநொச்சி முன்பள்ளி ஒன்றில் வழங்கப்பட்ட சுவையூட்டிய பைக்கெற் பால் நஞ்சானதால் 12 மாணவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

முன்பள்ளி மாணவர்களுக்கு சத்தூட்டும் திட்டம் ஊடாக நிறுவனமொன்று சுவையூட்டிய பைக்கெற் பாலை வழங்கியது. அவற்றை நிர்வாகம் மாணவர்களுக்கு வழங்கியது. சுவையூட்டிய பாலைக் குடித்த மாணவர்கள் வயிற்றோட்டம் மற்றும் வாந்தி பாதிப்புக்கு உள்ளானார்கள் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.



மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பால் பைக்கெற்றுகள் மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அரச உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் யோசனை ஐ. எம். எவ்விடம் வழங்கப்படும்!

கொழும்பு, ஏப். 05

வருமான வரி அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள தரப்பினரை அடிப்படையாகக் கொண்டு , அரச உத்தியோகத்தர்களுக்கு ஏதேனும் நிவாரணத்தை வழங்க முடியுமெனில் அது தொடர்பான யோசனை அடுத்த கட்ட பேச்சின்போது சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், வருமான வரி தொடர்பில் தொழில்சங்கங்கள் அண்மையில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துரையாடியிருந்தன.

எனினும், சர்வதேச



நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டபோது , குறிப்பிட்டளவு வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வரி தொடர்பில் இணங்க வேண்டியேற்பட்டது.

எனவே, சர்வதேச நாணய நிதியத்துடன் அடுத்த கட்ட கலந்துரையாடல் இடம்பெறும் போது , அரச உத்தியோகத்தர்களுக்கு ஏதேனுமொரு நிவாரணத்தை வழங்க முடியும் எனில், அதாவது கொடுப்பனவுகள் உள்ளிட்டவை தொடர்பான யோசனையை அரசாங்க தரப்பில் முன்வைப்பதாக ஜனாதிபதி தொழில்சங்க பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி அமைச்சரவைக்கும் விளக்கமளித்தார். எமது தேவைக்கு ஏற்ப அவற்றில் மாற்றங்களை மேற்கொள்ள முடியாது.

இவ்வாறு வருமான வரி செலுத்த வேண்டிய குழுவில் உள்ளடங்காத பலர் உள்ளனர். இவ்வாறனவர்களையும் வரி செலுத்தும் குழுவில் உள்ளடக்கினால் சிறியளவானோரிடம் அதிக வரி அறவிடுவதற்கு பதிலாக , பெரும்பாலானோரிடம் நியாயமான வரியை அறவிட முடியும் - என்றார். (ஐ)

# மின்சார கட்டணத்தை குறைக்க வேண்டும்!

## பொதுப் பயன்பாடு ஆணைக்குழு

கொழும்பு, ஏப். 05

மின்சார கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைக்க வேண்டும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க வலியுறுத்தியுள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மின்சார தேவை குறைந்துள்ளமை, டொலரின் மதிப்பு சரிவு, எரிபொருள் மற்றும் நிலக்கரி விலை குறைப்பு போன்ற விடயங்களை கருத்தில்கொண்டு அதற்கேற்ப மின் கட்டணமும் குறைய வேண்டும்.

2022ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டின் முதல் 3 மாதங்களில் மின்சாரத் தேவை 18சதவீதம் குறைந்துள்ளது. மின் தேவை குறைவதால், மின் உற்பத்தி மற்றும் வழங்கல் செலவும் குறைகிறது.

எனவே, இந்த வருடத்திற்கான மின்தேவை மின்சார சபையால் சரியாக மதிப்பிடப்படவில்லை என்பது தற்போது தெளிவாகியுள்ளது. எனினும், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் மதிப்பீடு சரியானது. குறைந்த தேவை இருப்பதால்தான், 35 சதவீத கட்டண உயர்வை பரிந்துரைத்துள்ளோம்.

ஆனால், இந்த நிலைமையை புரிந்து கொள்ளாமல் இலங்கை மின்சார சபை கோரிய 60 சதவீத கட்டண அதிகரிப்புக்கு ஆணைக்குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளனர். இலங்கை மின்சார சபையால் மதிப்பிடப்பட்ட மின்சாரத் தேவைக்கு பதிலாக தற்போது, குறைந்த தேவையே காணப்படுகின்றது. இதனால், மின் கட்டணத்தை குறைக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ஐ)

# கொள்கை வட்டி வீதத்தை நிலையாகப் பேண முடிவு

கொழும்பு, ஏப். 05

துணை நில் வைப்பு வசதி மற்றும் கடன் வசதி வீதங்களை நிலையான வகையில் பேணுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை தீர்மானித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, துணை நில் வைப்பு வசதி வட்டியை 15. 50 வீதமாகவும் மற்றும் கடன் வசதி வட்டியை 16. 50 வீதமாகவும் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
05.04.2023 புதன்கிழமை
பிலவ வருடம், பங்குனி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழர் தாயகத்தை முடக்கினால் என்ன நடக்கும்?

இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் வடக்கு - கிழக்கை முடக்குவோமென்று சூளுரைத்திருக்கின்றார். சாணக்கியன் அரசியலுக்கு மிகவும் புதியவர். 'இளம் கன்று பயமாறியாதென்பது போல்' சாணக்கியன் பாராளுமன்றத்தில் ஆவேசமாகப் பேசிவருகின்றார். அண்மைக்காலமாக, பாராளுமன்றத்தில் பேச்சுக்களால் நோக்கப்படும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினரென்றால் அது சாணக்கியன்தான். இதற்கு, அவரின் மொழிப்புலமையும் ஒரு காரணம்.

புதியவர் என்பதாலோ என்னவோ அவர் விடயங்களை ஆழமாகப் பரிசீலித்து பேசுவதற்கு தவறிவிடுகின்றார். இதனால், அவரின் பேச்சுக்களில் ஆவேசம் தெரியுமளவுக்கு, அறிவாற்றல் தெரிவதில்லை. இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து தமிழ் மிதவாதிகள் வடக்கு - கிழக்கை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

கடையடைப்பு, கறுப்புக்கொடி போராட்டம், பேரணி - என்று பலவாறான எதிர்ப்பு நடவடிக்கைகளை அவ்வப்போது முன்னெடுத்து வந்திருக்கின்றனர். ஆனால், அவற்றால் சாதிக்க முடிந்தது என்ன? உண்மையில் வடக்கு - கிழக்கை முடக்குவதால் கொழும்பின் இயக்கம் தடுக்கப்படுவதில்லை. கொழும்பின் இயங்குநிலையை பாதிக்காத எந்தவோர் எதிர்ப்பு நடவடிக்கையாலும் ஆளும் வர்க்கத்தை அச்சமடையச் செய்ய முடியாது.

எனவே, வடக்கு - கிழக்கை முடக்கினால் அதனை தென்னிலங்கை அரசியல்வாதிகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்களேயன்றி அவர்கள் எந்தவோர் எதிர்வினையும் ஆற்றப் போவதில்லை. எழுக தமிழ், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி மற்றும் இறுதியாக இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர்களின் பேரணி வரையில் இதற்கான சான்றுகளாகும். விடயங்கள் நடைபெற்றன - ஆனால், அதன் பின்னரும் எந்தவொரு மாற்றங்களும் ஏற்பட வில்லை. ஏனெனில், வடக்கு - கிழக்கை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும் விடயங்களால் தென்னிலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார ஒழுங்குகள் பாதிப்பதில்லை.

ஏனெனில், வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும் இது போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகளால் இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளை சீர்குலைக்க முடியாது. ஆனால், அதேவேளை கொழும்பில் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றால் அதன் தாக்கம் முற்றிலும் வேறானது.

வடக்கு - கிழக்கின் எதிர்ப்பு நடவடிக்கைகளால் தமிழர்களின் வர்த்தக நடவடிக்கைகள் மட்டுமே முடங்கும். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் முஸ்லிம் வர்த்தகர்கள்கூட, தமிழர்களின் நடவடிக்கைகளுக்கு பெரியளவில் ஆதரவு வழங்குவதில்லை. உண்மையில், வடக்கு - கிழக்கை முடக்குவதென்பதுகூட வெறும் கதை மட்டும்தான். வடக்கு மாகாணத்தை வேண்டுமானால் முழுமையாக முடக்கும் ஆற்றல் தமிழ்த் தேசிய தரப்புக்களுக்கு உண்டு. ஆனால், அதனால் கொழும்பை கீழிறங்கிவரச் செய்ய முடியாது. இதற்கான அடிப்படையான காரணம், தமிழர் பகுதிகள் தொழில்துறை வளர்சியுற்ற பகுதிகளில்லை. இதன் காரணமாகத்தான் அன்று மிதவாதிகளால் முன்னெடுக்கப்பட்ட சாத்வீக நடவடிக்கைகள் எவையுமே பெரியளவில் வெற்றியளிக்கவில்லை.

# புதிய பயங்கரவாத சட்டம் முன்னையதைவிட ஆபத்து

## பேராயர் மல்கம் ரஞ்சித்

*கொழும்பு, ஏப். 05*

1979இல் கொண்டு வரப்பட்ட பழைய பயங்கரவாத சட்டத்தைவிட புதிய பயங்கரவாத தடைச் சட்டம் மிகவும் கடுமையான அடக்குமுறை செயல் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் அடக்குமுறை அடிமைத்தனத்தையும் சர்வாதிகார வெறியையும் வளர்க்கும் செயல் என்பதால் இதைக் கண்டிப்பதாகவும் அவர் கூறினார்.

பேராயர் தனது இல்லத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும் எவரும் அவர்கள் இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் நேசிப்பதில்லை என்று கூற வேண்டும். இந்த சட்டமூலத்தை கொண்டு வருபவர்கள் அல்லது அதற்கு ஆதரவாக வாக்களிப்பவர்களுக்கே எதிர்காலத்தில் சரிவு ஏற்படும் - என்றார்.

(ஐ)

# புதிய பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

*கொழும்பு, ஏப். 05*

புதிய பயங்கரவாத தடுப்பு சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்துவதை எதிர்த்தும் நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு கொடுப்பதை நிறுத்தக் கோரியும் நேற்று கொழும்பு, கோட்டை ரயில் நிலையம் முன்பாக போராட்டம் நடைபெற்றது.




ஒன்றிணைந்த தொழில் சங்கங்களின் கூட்டமைப்பினரின் அழைப்பின்பேரில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டம், அரச சொத்துகளை விற்பனை செய்தல், உயர் வாழ்க்கை செலவுகள், நியாயமற்ற வரிக் கொள்கைகள் மற்றும் அரச அடக்குமுறை உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகளுக்கு எதிராக இந்த போராட்டம் நடத்தப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு பல தொழில்சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

(ஐ)

# ஹரின், மனுஷவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தடை!

*கொழும்பு, ஏப். 05*

பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதை தடுக்கும் வகையில் நுகேகொடை மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் கூறப்படும் ஒழுக்காற்று குழுவின் தலைவர் ஆகியோருக்கு எதிராகவே இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தின் படி, 2023 ஏப்ரல் 18 ஆம் திகதி வரை அனுப விக்கும் உத்தரவு அமுலில் இருக்கும்.

அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், தாம் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்தமை தொடர்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நிவாரணம் கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் தாக்கல் செய்யப்பட்ட மற்றுமொரு மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதன் மூலம், பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரின் உறுப்புரிமைகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி எந்தவோர் ஒழுக்காற்று நடவடிக்கையையும் எடுப்பதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள்.

**இடபம்**
எதிர்பார்ப்புகள் தடையின்றி முடிவடையும். நட்பு வட்டம் விரிவடையும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. பங்குதாரர்களின் பிரச்னைகள் தீரும். உத்தியோகத்தில் அமைதி நிலவும்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். பூர்வீக சொத்து பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். விருந்தினர் வருகை அதிகரிக்கும்.

**கடகம்**
சுறுசுறுவென்று செயல்பட்டு தேங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள்.புது பொறுப்புகள் தேடி வரும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்து போகும். எந்த உறுதிமொழியும் தரவேண்டாம்.

**கன்னி**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்களை கூட பல முறை போராடி முடிப்பீர்கள். சகோதரர்கள் வகையில் சங்கடங்கள் வரும் வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள்.

**துலாம்**
வீரியத்தை விட காரியம் பெரிது என்பதை உணர்வீர்கள். கண்டும் காணாமல் இருந்தவர்கள் வலிய வந்து பேசுவார்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும்.

**விருட்சிகம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**தனுசு**
உங்கள் செயலில் வேகம் கூடும். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறதியால் பிரச்சினை வந்து நீங்கும். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். யாருக்கும் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள்.

**கும்பம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி வரும். தாயாரின் உடல்நிலை சீராகும். புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள்.

**மீனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீடு களை கட்டும். புது நட்புகளால் பயன்பெறுவீர்கள்.

# ராகுலுக்கு ஆதரவாகப் போராட்டம் காங்கிரஸ் - பா. ஜ. கவினர் மோதல்!



நாகர்கோவில், ஏப். 05

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியின் பாராளுமன்ற உறுப்புரிமை பறிப்பைக் கண்டித்து கன்னியாகுமரி மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சியினர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சியினர் நாகர்கோவில் பா. ஜ. க. மாவட்ட அலுவலகம் முன்பு போராட்டம் நடத்தினர். அவர்கள் மத்திய அரசைக் கண்டித்து கோஷமிட்டவாறு சாலை மறியலில் ஈடுபட்டனர். அந்நேரத்தில் பா. ஜ க. அலுவலகத்தில் கட்சி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

காங்கிரஸ் கட்சியினர் மறியலில் ஈடுபடுவதைப் பார்த்து, அலுவலகத்தில் இருந்த பா. ஜ. க. நிர்வாகிகள் வெளியே வந்து, 'கட்சி அலுவலகத்தின் முன்பு போராட்டம் நடத்தாதீர்கள். வேறு இடத்துக்கு செல்லுங்கள்' எனக் கூறியுள்ளனர். இதனால் இரு தரப்பினர் இடையேயும் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பானது.

அப்போது கட்சிக் கொடிக்கான கம்புகளால் இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் தாக்கினர். சாலையோரம் கிடந்த கற்களை வீசியும் இரு தரப்பினரும் மோதிக்கொண்டனர்.

அங்கு வந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த மோதலில் மோதலில் இரு தரப்பையும் சேர்ந்த 4 பேர் காயம் அடைந்தனர்.

மோதலின் பின்னர், வீசி எறியப்பட்ட காங்கிரஸ் கொடிகளை பா. ஜ. கவினர் சாலையில் போட்டு எரித்தனர். இதை அறிந்து அங்கு வந்த காங்கிரஸ் கட்சியினர் மீண்டும் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

அங்கு பதற்றம் ஏற்பட்டது. எனினும், பொலிஸார் குவிந்திருந்ததால் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

# செயல்குழுக் கூட்டத்தை இரத்து செய்தது அ. தி. மு. க.!

சென்னை, ஏப். 05

சென்னையில் நாளை மறுதினம் நடைபெறவிருந்த அ. தி. மு. க. செயல்குழு கூட்டம் இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பலகட்ட சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு அ. தி. மு. கவின் பொதுச்செயலாளராக பழனிசாமி பொறுப்பேற்றுக்கொண்டார். அவரின் தலைமையில் அடுத்த ஆண்டு மக்களவை தேர்தலை அ. தி. மு. க. எதிர்கொள்ள இருக்கிறது.

இந்த தேர்தல் அவரது ஆளுமை மற்றும் தலைமைப் பண்பை மதிப்பிடும் காரணியாக உள்ளது. மக்களவை தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு உள்ள நிலையில், அதற்கு கட்சியை தயார்படுத்தும் விதமாக வரும் 7ஆம் திகதி மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை பழனிசாமி அறிவித்திருந்தார்.

இதற்கிடையே அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி தொடர்பாக பா.ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களிடம் தெரிவித்த கருத்துகள், அதற்கு பழனிசாமி எதிர்வினையாற்றியது போன்றவற்றால் இரு கட்சிகளிலும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அதனால் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை ரத்து செய்துவிட்டு, கட்சி செயல்குழு கூட்டம், நாளை மறுதினம் சென்னையிலுள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெறும் என எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.

இந்நிலையில் செயல்குழு கூட்டம் இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை வருகிறார் மோடி; பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்!



சென்னை, ஏப். 05

சென்னை மத்தி - கோவை இடையிலான வந்தே பாரத் ரயில் சேவையை தொடங்கி வைப்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி வரும் 8ஆம் திகதி தமிழ்நாடு வருகிறார்.

சென்னை மற்றும் கோவை இடையேயான வந்தே பாரத் ரயில் சேவையையும், தாம்பரம் - செங்கோட்டை இடையே வாரத்துக்கு 3 முறை இயக்கப்படும் ரயில் சேவையையும் தொடங்கி வைக்கும் அவர், பின், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ரூ.2500 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த முனையங்களை திறந்து வைக்க உள்ளார்.

ஆளுநர் மாளிகையில் தங்கும் பிரதமர் மோடியை சந்திக்க அ. தி. மு. க., பா. ஜ. க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சார்ந்த தலைவர்கள் நேரம் கேட்டு வருகின்றனர்.

இதையடுத்து பிரதமர் நரேந்திர மோடி வரும் ஏப்ரல் 9 ஆம் திகதி சென்னையில் இருந்து கர்நாடகாவிற்கு பயணம் மேற்கொள்ள உள்ளார். கடந்த நான்கு மாதங்களில் இது மோடியின் 8ஆவது கர்நாடக பயணம் ஆகும். பிரதமர் நரேந்திர மோடி தமிழகம் வருவதையொட்டி, பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவது குறித்து தமிழ்நாடு பிரதி பொலிஸ் மா அதிபர் சைலேந்திர பாபு தலைமையில் ஆலோசனை கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர், சென்னை பொலிஸ் ஆணையர் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

# ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் தேவை ஏதும் இப்போது இல்லை!

## கூறுகின்றது மொட்டுக் கட்சி

கொழும்பு, ஏப். 05

**ஜனாதிபதித் தேர்தலை விரைவாக நடத்தவேண்டிய தேவை ஏதும் தற்போது கிடையாது என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**



கொழும்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், 'அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண சபைகள் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்ற தேர்தல் விரைவாக நடத்தப்படவேண்டும்.

தேர்தலை பிற்போடவேண்டிய தேவை எமக்கு கிடையாது. கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்கு தயாராகவே உள்ளோம்.

எந்த தேர்தல் இடம்பெற்றாலும் வெற்றிகரமாக அதனை எதிர்கொள்வோம். பெரும்பாலான மக்கள் பொதுஜன பெரமுனவுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவார்கள்.

ஊழல் ஒழிப்புச் சட்டமூலம் இம்மாத காலத்துக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் தரப்பினருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் இந்த சட்டமூலத்தின் ஊடாக விசேட கவனம் செலுத்தப்படும்.

ராஜபக்ஷர்களை திருடர்கள் என விமர்சித்து ஒரு தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொண்டார்கள். நல்லாட்சி அரசாங்கத்தில் எந்த குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படவில்லை.

ஊழல் ஒழிப்பு தொடர்பில் எவ்வித சட்டங்களும் இயற்றப்படவில்லை. தற்போது பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் ஊழல் ஒழிப்பு சட்டம் உருவாக்கப்படவுள்ளதையிட்டு பெருமையடைகிறோம். ஆகவே ஊழல் ஒழிப்புச் சட்டமூலத்திற்கு ஆதரவு வழங்குவோம்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டமூலம் தொடர்பில் தற்போது பல்வேறு மாறுப்பட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது-என்றார். (அ)

# உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஏப். 05

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்டமூலத்தை உருவாக்குவதற்கு அனுமதி கோரி சமர்ப்பித்த பத்திரத்திற்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கோரும் உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை உருவாக்கும் மற்றுமொரு முயற்சியாக இது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தென்னாப்பிரிக்காவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இதே போன்ற பொறிமுறையை மாதிரியாகக் கொண்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சரும் வெளிவிவகார அமைச்சரும் தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட பின்னர் இந்த அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்தனர்.

யுத்தத்துக்குப் பிந்திய சூழலில் சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அத்தகைய அமைப்பின் நன்மைகள், தீமைகள் குறித்து இருவரும் அங்கு கலந்துரையாடியுள்ளனர்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் 21 உறுப்பினர்கள் இருப்பார்கள் என்றும் இவர்கள், பாதிக்கப்பட்ட மக்களின் வழக்குகளை விசாரிக்க தனித்தனி பெஞ்ச்களில் செயல்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தேர்தலில் போட்டியிடும் ஊழியர்களுக்கு ஏப்ரல் 10இற்குள் அடிப்படைச் சம்பளம்!

கொழும்பு, ஏப். 05

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்களுக்கான அடிப்படை சம்பளத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்தார்.

புத்தாண்டு பிறக்கவுள்ளதால் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக கூறி, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுமா என கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை பதிலளித்து உரையாற்றிய அமைச்சர், ஊழியர்களுக்கான மார்ச் 9 மற்றும் ஏப்ரல் 25 ஆம் திகதிகளுக்கான சம்பளம் வழங்கப்படும்.

அடிப்படைச் சம்பளம் 10 ஆம் திகதிக்குள் வழங்கப்படும்-என்றார். (அ)

# அம்பாந்தோட்டையில் சீனாவின் ராடர் தளம்?

## இந்தியாவை உளவு பார்க்கத் திட்டம்

கொழும்பு, ஏப். 05

ராடர் தளமொன்றை இலங்கையில் நிர்மாணிக்க சீனா திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியப் பெருங்கடலில் அமையப்பெற்றுள்ள இந்திய மற்றும் அமெரிக்காவின் இராணுவத்தளங்களை உளவு பார்ப்பதற்காக இந்த ராடர் தளத்தை சீனா இலங்கையில் அமைக்கவுள்ளது.

இலங்கை உளவு துறை தரப்புக்களால் இந்த திட்டம் தொடர்பிலான தகவல் வெளிக்கொணரப்பட்டுள்ளதாக பிரித்தானிய இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

சீனா இலங்கைக்கு வழங்கிய கடன்களின் மூலோபாய ஆதாய நடவடிக்கையாக இந்தத் திட்டம் அமைந்துள்ளதென நிபுணர்களை கோடிட்டு குறித்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ராடர் தளமானது மாத்தறைப் பகுதியில் தெய்வேந்தர முனைக்கு அருகிலுள்ள அடர்ந்த வனப்பகுதியில் அமைக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்திய கடற்பரப்பின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள இந்திய கடற்படை முகாம்கள், டியாகோ கார்சியாவிலுள்ள அமெரிக்க மற்றும் பிரித்தானிய இராணுவத்தளங்களை உளவு பார்ப்பதற்கு குறித்த ராடர் சீனாவுக்கு பெரிதும் பயன்படும்.

மேலும், இந்தியாவிலுள்ள சிறிஹரிகோட்டா விண்வெளி ஆய்வு மையத்தின் நடவடிக்கைகள் மற்றும் ஒடிசாவிலுள்ள ஏவுகணை சோதனைத்தளம் ஆகியனவற்றையும் குறித்த ராடர் மூலம் அவதானிக்க முடியும்.

கடந்த ஆண்டுகளில் சீனா 180 இற்கும் மேற்பட்ட விண்வெளி கருவிகளை ஏவியுள்ளதுடன் இந்த வருடத்தில் 200 விண்வெளி கருவிகளை அனுப்பவதற்கும் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கிளிநொச்சியில் கடும் காற்று; 91 குடும்பங்களுக்குப் பாதிப்பு

கிளிநொச்சி, ஏப். 05

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பட்ட காற்றுடன் கூடிய வானிலை காரணமாக 91 குடுப்பங்களைச் சேர்ந்த 301 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே குறித்த அனர்த்த பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன.

கிளிநொச்சி நகர் மற்றும் பெரிய பரந்தன் பகுதியில் அமைந்துள்ள நெல் களஞ்சியசாலைகளும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 05

மழை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 19 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# வெதுப்பக பொருட்களின் விலைகளும் குறைப்பு?

கொழும்பு, ஏப். 05



பாண் உள்ளிட்ட வெதுப்பக பொருட்களின் விலையை குறைப் பது தொடர்பில் கவனம் செலுத் தப்பட்டுள்ளது.

எரிவாயுவின் விலை குறைக்கப்படும் பட்சத்தில் பாண் விலை குறைக்கமுடியும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் விலையை குறைப்பது தொடர்பில் தமது சங்கம் கூடி தீர்மானம் எடுக்கவுள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார். (அ)

# உள்ளூராட்சி சபைகளின் செயல்பாடுகளை கண்காணிக்கும் குழு பிரதமரைச் சந்தித்தது

கொழும்பு, ஏப். 05

உள்ளூராட்சி சபைகள் செயலாளர்கள் மற்றும் ஆணையாளர்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததன் பின்னர் அவற்றின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு பிரதமர் தலைமையில் நேற்று முன் தினம் கூடியது.

மேற்படி குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், ஆளுநர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களும் அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதி ஒதுக்கீட்டை நிர்வகிப்பது இந்தக் குழுவின் ஊடாகவே மேற்கொள்ளப்படுவதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாக நடவடிக்கைகளை ஆளுநர்களும் மாவட்ட செயலர்களும் கண்காணித்து முன்பைப் போன்று மக்களுக்கு எவ்வித அசௌகரியமும் இன்றி இந்த நிறுவனங்களை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதமர் வலியுறுத்தினார். (அ)

# டயனாவின் ஆசனம் பறிபோகுமா? தீர்ப்பு ஜூனில் அறிவிக்கப்படும்!

கொழும்பு, ஏப். 05

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேயின் பாராளுமன்ற ஆசனம் தொடர்பான தீர்ப்பை எதிர்வரும் ஜூன் மாதம் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கவுள்ளது.

டயானா கமகேயின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை சவாலுக்கு உட்படுத்தும் மனு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டபோது. 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கமகேயின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தகுதி நீக்கம் செய்ய உத்தரவிடுமாறு கோரி சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

பிரித்தானிய பிரஜை என்ற அடிப்படையில் கமகேவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தகுதி நீக்கம் செய்ய இந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# தலைமன்னார் - தனுஷ்கோடி இடையே கப்பல் சேவையை ஆரம்பிக்க ஏற்பாடு

## ஆன்மீக சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் திட்டம்

கொழும்பு, ஏப். 05

இலங்கை தலைமன்னாரில் இருந்து தமிழகம் தனுஷ்கோடி வரை 'ராமர்பாலம்' பகுதி ஊடாக கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பிலும், ஆன்மீகச் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது சம்பந்தமாகவும் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தலைமையில், இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் பங்குபற்றலுடன் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் இந்திய தூதரகத்தின் துணைத் தூதுவரும், அந்நாட்டு முதலீட்டாளர்களும் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், இலங்கை கடற்படை அதிகாரிகள், துறைமுக அதிகாரசபை அதிகாரிகள், நில அளவை திணைக்கள அதிகாரிகள், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் உள்ளிட்டோரும் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு அரசு பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைய இலங்கையின் வடபகுதியில் உள்ள தலைமன்னாருக்கும், இந்தியாவின் தென்முனையான தனுஷ்கோடிக்கும் இடையிலான ராமர் பாலப் பகுதியை அபிவிருத்தி செய்து, அதன்மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பில் சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், தலைமன்னார் முனையத்தை அபிவிருத்தி செய்வதன்மூலம் ஏற்படும் சாதகத்தன்மை பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து தமிழகத்துக்கு 3 கோடி பக்தர்கள் வருகின்றனர். அவர்களில் ஒரு பகுதியினரை ராமர் பாலம் ஊடாக அழைத்து வந்தால் அதன்மூலம் சுற்றுலாத்துறை மேம்படும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் நடைபெற்ற ஆரம்பகட்ட கலந்துரையாடல் சாதகமாக முடிவடைந்துள்ளதாக இருதரப்பினரும் தெரிவித்துள்ளனர். (அ)

# மிக அழகான 23 நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கம்!

கொழும்பு, ஏப். 05

2023 ஆம் ஆண்டில் உலகில் பயணம் செய்வதற்கு மிகவும் பொருத்தமான 23 நாடுகளில் இலங்கையும் சேர்க்கப்பட்டுள்ளது.

போர்ப்ஸ் இதழ் சுற்றுலாத்துறை நிபுணர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த 23 நாடுகளுக்குப் பெயரிட்டுள்ளது.

விருது பெற்ற பயண ஆவணப்படத் தயாரிப்பாளரான ஜூலியானா ப்ரோஸ்ட் இந்தப் பட்டியலில் இலங்கையைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

அதிக பணவீக்கம் இருந்தாலும், இலங்கை இயற்கை எழில் கொஞ்சும் சுற்றுலா தலமாக இருக்கும் என ஜூலியானா குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரம், கண்டி, யானைகள் சரணாலயம் மற்றும் யால தேசிய பூங்கா ஆகியவை சுற்றுலாத் தலங்களாகவும், இலங்கையில் குறுகிய தூரத்தில் சென்று பார்க்கக்கூடிய பல இடங்கள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# இனவாதத்தை ஏற்படுத்துகிறது தொல்பொருள் திணைக்களம்!

## சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 05

தொல்பொருள் திணைக்களம் மக்களிடையே இனவாதத்தை ஏற்படுத்தவே பயன்படுத்தப்படுகின்றது என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கேள்வி நேரத்தின்போதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சரே நீங்கள் ஓர் இனவாதி. நீங்கள் கடந்த காலத்தில் மட்டக்களப்புக்கு வந்த போதும் குசலான மலையில் வைத்து உங்களைத் தடுத்து அனுப்பியமை காரணமாகவே இன்றும் குசலான மலையில் சைவ சமய வழிபாடுகளைச் செய்ய முடிகின்றது.

இந்த தொல்பொருள் திணைக்களத்தை வைத்துக்கொண்டு நீங்கள் இந்த நாட்டுக்குள்ளே மீண்டும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தவே முயற்சிக்கின்றீர்கள்.

வெடுக்குநாறி மலையிலே ஒரு குழப்பம், குருந்தூர் மலையிலே ஒரு குழப்பம், குசலான மலையிலே ஒரு குழப்பம், அரிசி மலையிலே ஒரு குழப்பம், தற்போது திருகோணமலை புல்மோட்டையில் ஒரு குழப்பம்.

இந்த நாட்டினுல் ஐ.எம்.எப் ஒப்பந்தம் வந்தாலும் சரி உங்களைப் போன்ற இனவாதிகள், உங்களைப்போன்ற இனவாத அமைச்சர்கள், இந்த தொல்பொருள் திணைக்களத்தை வைத்துக்கொண்டு, வடக்கு-கிழக்கில் எங்கள் காணிகளை சுவீகரிக்கின்றீர்கள்.

தொல்பொருள் செயலணி தொல்பொருளைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் நாங்களும் உறுதியாக இருக்கின்றோம்.

ஆனால் தொல்பொருள் என்ற போர்வையில் ஏன் பௌத்த பிக்குகள் வரவேண்டும். ஏன் அதிகாரிகள் இல்லையா?

சோற்றுக்கும் தண்ணீருக்கும் வழியில்லாமல் இருக்கும் போதும்கூட தொல்பொருள் திணைக்களத்துக்குப் பணம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இவ்வாறான இனவாதச் செயற்பாடுகள் தொடருமாக இருந்தால், ஐ.எம்.எப் மட்டும் இல்லை எவறாலும் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாது. இந்த தொல்பொருள் செய லணியும், தொல்பொருள் திணைக்களமும், நீங்களும், இந்த அரசாங்கமும் இனவாதத்திற்காகவே இதனைப் பயன்படுத்துகின்றீர்கள்.

இதனை உடனடியாக நிறுத்தாவிட்டால் வடக்கு-கிழக்கை நாங்கள் முடக்கு வோம். உங்களைப்போன்ற இனவாதிகள் வடக்கு கிழக் குக்கு வர முடியாதவாறு முடக்குவோம் - என்றார். (அ-06)

# ஐக்கிய மக்கள் சக்திக்குள் எந்தப் பிளவும் கிடையாது!

கொழும்பு, ஏப். 05

ஐக்கிய மக்கள் சக்தி பாதுகாப்பாக இருப்பதாகவும், எமது கட்சியின் எம்.பி.க்கள் அரசாங்கத்துக்குச் செல்வதாகவும் கூறப்படுவது இட்டுக்கட்டப்பட்ட பொய் எனவும் குருநாகல் மாவட்ட சபை உறுப்பினர் துஷார இந்துனில் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியை கலைப்பது தொடர்பில் எப்பொழுதும் பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாகவும், அவற்றுக்கு பதிலளிப்பதில் தாம் சோர்வடைவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பி.க்கள் எவரும் அரசாங்கத்தில் இணையமாட்டார்கள் என்றும் துஷார இந்துனில் கூறினார்.

# பாராளுமன்ற முடிவை மீறிய சட்டக் கல்லூரியின் அதிபர்!

## நடவடிக்கை எடுக்குமாறு எம்.பிக்கள் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 05

மாணவர்களை அவரவர் தாய்மொழியில் பரீட்சை எழுத அனுமதிப்பது தொடர்பாக பாராளுமன்றம் எடுத்த தீர்மானத்தை மீறி சட்டக்கல்லூரி அதிபர் செயற்பட்டுள்ளார் என்றும் அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

பாராளுமன்றத்தின் தீர்மானத்தை மீறி சட்டக்கல்லூரி அதிபர் செயற்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அத்தோடு சட்டக் கல்லூரியின் அதிபரைச் சலுகைகள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பான குழுவின் முன் அழைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார முன்மொழிந்துள்ளார்.

சமீப காலமாக சட்டக் கல்லூரி பரீட்சையை ஆங்கிலத்தில் நடத்துவதற்கு ஆளும் கட்சி மற்றும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ஆங்கிலத்தில் பரீட்சைகளை நடத்துவதற்கான ஒழுங்குமுறை விதிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்ட நிலையில் பரீட்சைகளை ஆங்கிலத்தில் நடத்த முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே மேலும் சட்டக் கல்லூரி அதிபர் சிங்களம் மற்றும் தமிழில் சட்டப் பரீட்சைகளை நடத்துவதற்கு எதிராக பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறார் என்றும் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# அதிகளவு சுற்றுலாப் பயணிகள் மார்ச் மாதத்தில் இலங்கைக்கு!

கொழும்பு, ஏப். 05

நாட்டில் மார்ச் மாதத்தில் 125,495 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக சுற்றுலாத்துறை தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 2020 ஆம் ஆண்டுக்கு பிறகு, இந்த மாதத்தில் தான் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

ரஷ்யா, இந்தியா, இங்கிலாந்து, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேந்த சுற்றுலா பயணிகளே இலங்கைக்கு அதிகம் வந்துள்ளனர்.

இந்த வருடம் 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டதாகவும், அந்த எதிர்பார்ப்பு 2 மில்லியனாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் சுற்றுலா ஊக்குவிப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# கிருமிநாசினிகள் விலைகளை 20 வீதத்தால் குறைக்க தீர்மானம்

கொழும்பு, ஏப். 05

அனைத்து களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் விலைகளை 20 வீதத்தால் குறைப்பதற்கும், குறிப்பிட்ட பூச்சிக்கொல்லிகளின் விலையில் 40 வீதம் வரை சலுகைகளை வழங்குவதற்கும் நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் பூச்சிக்கொல்லி மற்றும் களைக்கொல்லிகளின் விலைகளைக் குறைப்பதற்கு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவின் பரிந்துரையின் பேரில் விவசாய அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது. (அ)

# ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 05

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று செவ்வாய்க்கிழமை நிலவரப்படி அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்றைய தினம், அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 313.37 ரூபாயாகவும் விற்பனை விலை 330.50 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது.

நேற்று முன் தினம் டொலரின் கொள்முதல் பெறுமதி 316.75 ரூபாயாகவும், அதன் விற்பனை விலை 334.20 ரூபாயாகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

### வெடுக்குநாறிமலை விவகாரம்

# அமைச்சரவையில் உணர்வுகளை வெளிப்படுத்திய அமைச்சர் டக்ளஸ்

கொழும்பு, ஏப். 05

வெடுக்குநாறி விவகாரத்தில் சிலைகள் உடைக்கப்பட்ட போது ஏற்பட்ட உணர்வுகளை விட, கடந்த சில தினங்களில் வெளிப்படுத்தப்பட்ட சில தரப்புக்களின் வியாக்கியானங்கள் எமக்கு ஏற்படுத்திய உணர்வுகள் ஆழமானவை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அதிருப்தி வெளியிடப்பட்ட நிலையில், குறுக்கிட்ட ஜனாதிபதி எதிர்வரும் வாரங்களில் விரிவாக கலந்துரையாடி சரியான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

வெடுக்குநாறி விவகாரம் தொடர்பாக நேற்று முன் தினம் இடம்பெற்ற அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையிலேயே குறித்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

குறித்த அமைச்சரவைக் கூட்டத்தில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"வெடுக்குநாறி மலையை 2018 ஆம் ஆண்டு தொல்லியல் திணைக்களம் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசமாக அடையாளப்படுத்தியிருந்தது. (ஆனாலும் இதுவரை அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை)

தொடர்ச்சியாக, 2019 ஆண்டிலிருந்து வெடுக்குநாறி மலையில் அமைந்திருக்கும் புராதன ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூசை வழிபாடுகளுக்கு தொல்லியல் திணைக்களத்தினால் இடையூறு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.



இந்நிலையிலேயே 2020 ஆம் ஆண்டு நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம் பொதுமக்கள் பூசை வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு எந்தவித மான தடை உத்தரவுகளையும் பிறப்பிக்காத நிலையில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பி வைத்துள்ளதாக சொல்லப்படுகிறது.

இது தொடர்பாக சட்டமா அதிபர் தரப்புக்களுடன் கலந்துரையாடியபோது, குறித்த வழக்கு கோவை இன்னும் தமக்கு கிடைக்கவில்லை எனவும், கிடைத்தவுடன் உரிய ஆலோசனைகள் வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஆக, வெடுக்குநாறி விவகாரத்தில் நீதிமன்றம் எந்தவித மான தடை உத்தரவுகளையும் வழங்காதபோதிலும், வழக்கு நிலுவையில் இருப்பதை காரணம் காட்டி, உடைக்கப்பட்ட சிலைகளை மீளப் பிரதிஷ்டை செய்வதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. அதேவேளை, குருந்தூர் மலையில் விகாரை அமைப்பதற்கு இடைக்கால தடையை நீதிமன்றம் விதித்திருக்கின்ற நிலையிலும் விகாரை கட்டி முடிக்கப்பட்டிருப்பதை ஊடகங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இவ்வாறான சம்பவங்கள் தமிழ் மக்களை மாத்திரமல்ல, நியாயமாகவும் நடுநிலையாகவும் சிந்திக்கும் அனைவருக்கும் வேதனையை ஏற்படுத்தும்.

இன்றைய அமைச்சரவையில்கூட உண்மை மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான அமைச்சரவை பத்திரம் விவாதத்திற்கு வந்திருக்கிறது. இவையெல்லாம் அர்த்தபூர்வமானவையா என்ற எண்ணத்தினை நடக்கின்ற சம்பவங்கள் தோற்றுவிக்கின்றன" என்று தெரிவித்தார்

இந்நிலையில் குறுக்கிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த விடயம் தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற அதிருப்திகளையும் அதில் இருக்கின்ற நியாயத்தினையும் புரிந்து கொள்வதாகவும் எதிர்வரும் வாரங்களில் சம்மந்தப்பட்ட அனைவருடனும் கலந்துரையாடி சரியான தீர்மானத்தினை மேற்கொள்ளப்படவேண்டும் என்பதே தன்னுடைய நிலைப்பாடு எனவும் தெரிவித்தார். (அ)

# கரைச்சி பிரதேச சபை ஊழல்; விசாரணை குழு நியமனம்!

### வடக்கு உள்ளூராட்சி திணைக்களம் நடவடிக்கை

கிளிநொச்சி, ஏப். 05

**கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் கடந்த நான்கு வருடங்களில் இடம்பெற்ற ஊழல்,முறைகேடுகளை விசாரிக்க புதிதாக ஆரம்ப புலன்விசாரணைக் குழு ஒன்றை வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் நியமித்துள்ளதாக வடக்கு உள்ளூராட்சி திணைக்களம் தகவல் வழங்கியுள்ளது.**

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கிளிநொச்சி ஊடகவியலாளர் ஒருவர் விடுத்த கோரிக்கை பதிலளித்தபோது மேற்படி தகவலை வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் வழங்கியுள்ளது.

கிளிநொச்சி தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளர் ப.ரவிச்சந்திரன் தலைவராகவும், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளர் திருமதி த.தயானந்தன், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின்

தொழிநுட்ப உத்தியோகத்தர் பா. நக்கீரன் ஆகிய இருவரையும் உறுப்பினர்களாகவும் கொண்டு புதிய விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆரம்ப புலன்விசாரணைக் குழுவின் அறிக்கை சம்பந்தப்பட்ட ஒழுக்காற்று அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் அதில் குறைபாடுகள் காணப்பட்டமையை குறித்த அதிகாரியால்

சுட்டிக்காட்டப்பட்டிருந்ததாகவும் எனவே அக் குறைபாடுகளை நிர்வத்தி செய்து தருமாறு முதலில் நியமிக்கப்பட்ட ஆரம்ப புலன்விசாரணை குழுவினரிடம் கோரியபோது அதில் விசாரணைக்குழுத் தலைவர் இடமமாற்றம் பெற்றிருப்பதனாலும்,

உறுப்பினர் ஒருவர் ஓய்வுப் பெற்றமையாலும் அவர்களால் விசாரணை அறிக்கையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து தர முடியாதிருப்பதாக அறிவித்திருந்த நிலையில் அவ் வறிக்கையை கொண்டு எவ்வித தீர்மானங்களையும் மேற்கொள்ளமுடியாது என்பதனால் கரைச்சி பிரதேச சபையில் இடம்பெற்ற ஊழல்களை விசாரிக்க மேற்படி புதிய ஆரம்ப புலன்விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# இரகசிய வாக்கு சீட்டுகள் பாராளுமன்றால் அழிப்பு!

கொழும்பு, ஏப். 05

ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதையடுத்து பாராளுமன்றத்தில் இடைக்கால ஜனாதிபதி தெரிவுக்காக இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பின்போது அளிக்கப்பட்ட வாக்குச்சீட்டுகள் சட்டத்தின் பிரகாரம் அழிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட அறிவிப்புக்களை விடுக்கும் போதே போது இந்த அறிவிப்பை விடுத்த அவர் மேலும் கூறுகையில் -

கடந்த ஆண்டு ஜூலை 20ஆம் திகதி பராளுமன்றத்தில் இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்புக்கான அளிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் ஜனாதிபதி தெரிவு விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 18ஆவது உறுப்புரையின் பிரகாரம் மற்றும் கடந்த மார்ச் 23ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவின் அனுமதிக்கு அமைய பாராளுமன்ற செயலாளர் நாயகத்தால் அழிக்கப்பட்டது.

இந்த இரகசிய வாக்கெடுப்பில் ஆளும் தரப்பின் வேட்பாளரான பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளையும் எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் டலஸ் அழகபெரும 82 வாக்குகளையும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் 3 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய நாட்டின் 8 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பதும் அறிந்தவையே. (ஐ)

### தினேஷ் ஷாப்டர் மரணம்

# பிரேத அறிக்கையை நிபுணர் குழுவிடம் வழங்கக் கட்டளை!

கொழும்பு, ஏப். 05

தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான அரச பகுப்பாய்வாளரின் அறிக்கையை புதிதாக பிரேத பரிசோதனை செய்ய நியமிக்கப்பட்டுள்ள மருத்துவ நிபுணர்கள் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நீதிமன்றபதி வாளருக்கு நேற்று உத்தரவிட்டது.

தினேஷ் ஷாப்டரின் குடும்ப நலன்களை அவதானித்த சட்டத்தரணி முன்வைத்த கோரிக்கையை கருத்தில் கொண்டு கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன, தற்போது புதிதாக பிரேத பரிசோதனை செய்து வரும் சட்ட மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் பார்வைக்காக அரசாங்க பகுப்பாய்வாளரின் கண்டுபிடிப்புகளை அனுப்ப வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

பெப்ரவரி 27 அன்று, தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் கொலையா அல்லது தற்கொலையா என்பதை அறிய, அவரின் மரணம் குறித்து புதிதாக பிரேத பரிசோதனை செய்ய ஐந்து பேர் கொண்ட மருத்துவ நிபுணர் குழுவை நீதிமன்றம் நியமித்தது. ஐந்து பேர் கொண்ட குழுவில் பேராசிரியர் அசேல மெண்டிஸ் (தலைவர்) பேராசிரியர் பி.சி. ஆர். பெரேரா, பேராசிரியர் டி. எச்.எஸ். பெர்னாண்டோ மற்றும் இரண்டு ஜேஎம்ஓக்கள் மருத்துவர் சிவ. சுப்பிரமணியன் மற்றும் மருத்துவர் பி.ஆர். ருவன்புர. தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணத்துக்கான உண்மையான காரணத்தை கண்டறிய புதிய விசாரணையை மேற்கொள் அவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புத்தாண்டை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள்

கொழும்பு, ஏப். 05

தமிழ்-சிங்கள சித்திரை புத்தாண்டை முன்னிட்டு நேற்று முதல் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விசேட ரயில் சேவைகள் வழக்கமான ரயில் சேவைகளுக்கு மேலதிகமாக சேவையில் ஈடுபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கசிப்பு வாங்கி வர மறுத்த 3 பிள்ளைகளை பாடசாலை சீருடையுடன் விரட்டிய தந்தை!

கொழும்பு, ஏப். 05

கசிப்பு வாங்கி வருமாறு கூறிய கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்த, பாடசாலை செல்லும் தனது மூன்று பிள்ளைகளை பாடசாலை புத்தகங்கள் மற்றும் சீருடையுடன் வீட்டை விட்டுத் துரத்திய தந்தை ஒருவரை இங்கிரிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவரால் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்கள் தொடர்பில் அவரது மனைவி இதற்கு முன்னர் இங்கிரிய பொலிஸில் ஏழு முறைப்பாடுகளை பதிவு செய்திருந்த நிலையில், பின்னர் அந்த முறைப்பாடுகள் அனைத்தும் சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டன.

கைதானவர் தனது 9, 11 மற்றும் 13 வயதுடைய தனது பிள்ளைகளை அனுப்பி கசிப்பு வாங்குவதை வழக்கமாக கொண்டுள்ளார்.

குறித்த நபர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பொலிஸார் அவரது கிராமமான ரைகம்வத்தையில் தேடுதல் மேற்கொண்டதுடன், கசிப்பு காய்ச்சும் உபகரணங்களுடன் ஏழு பீப்பாய் கசிப்பை கைப்பற்றியுள்ளனர். சந்தேகத்தின் பேரில் 4 பேரை பொலிஸார் கைது செய்தனர். (அ)

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தற்பாதுகாப்புக்கே தவிர தேசிய பாதுகாப்புக்கு அல்ல!



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மதிப்பு சமூகத்தின் மேல் தட்டு வர்க்கத்தினர் மத்தியில் உயர்ந்து கொண்டுபோகிறது. அவர்களைப் பொறுத்தவரை பொருளாதார நெருக்கடியை அவர் கையாளுகின்ற முறை சிறப்பானதாக இருக்கிறது. அறகலய காலப்பகுதியில் நிலவிய குழப்பநிலையில் இருந்து நாட்டை மீட்டு ஒழுங்குநிலையை ஏற்படுத்தியதிலும் இலங்கை முன்னொருபோதும் பெறாத பெரிய கடனுதவியை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்றதிலும் இருந்தே அவரது சாதனை நோக்கப்படுகிறது.

நாட்டை ஆட்சி செய்வதற்கு சிறந்த தலைவர் ஜனாதிபதியே என்பதும் அவருக்கு மாற்று வேறு எவரும் இல்லை என்பதுமே இதன்மூலம் கூறப்படும் செய்தியாகும். நாணய நிதியத்தின் கடனுதவி கிடைக்கப்பெற்றதும் விரைவாக அரசாங்கம் பெற்றோல் மற்றும் டீசலின் விலையை குறிப்பிடத்தக்க அளவில் குறைத்தது. வேறு பல அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட்டிருக்கின்றன.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுக்க மக்கள் மத்தியில் பிரபலமாயிராத நடவடிக்கைகளை துணிச்சலுடன் மேற்கொள்கின்றது. செய்யவேண்டியதை ஜனாதிபதி செய்கிறார் என்றும் இது நோக்கப்படுகிறது. கடுமையான பணிகளை அவர் முன்னெடுப்பதை எதிர்க்கட்சிகள் விரும்புவது அவை தேர்தல்கள் பற்றி அமைதியாக இருப்பதற்கான காரணங்களில் ஒன்று.

எரிபொருள் விநியோகத்தை பொறுப்பேற்பதற்கு இராணுவத்தை அழைத்ததன் மூலம் பெற்றோலியத்துறை ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஜனாதிபதி கையாண்ட விதம் செய்யவேண்டியது எது என்று அரசாங்கம் நம்புகிறதோ அதில் விட்டுக்கொடுப்பைச் செய்யப்போவதில்லை என்பதன் அறிகுறியாகும். மேலும், வேலைநிறுத்தப் போராட்ட தலைவர்கள் உடனடியாகவே கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

விசாரணையின் பின்னர் அவர்கள் பதவிநீக்கம் செய்யப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது. தங்களை வேலைசெய்யுமாறு இராணுவம் நிர்ப்பந்திப்பதாக வேலைநிறுத்தக்காரர்கள் முறையிடுகிறார்கள்.

தகுதியின்மை, அளவுக்கு அதிகமான பணியாளர்கள் மற்றும் ஊழல் காரணமாக பல தசாப்தங்களாக நட்டத்தில் இயங்கிவரும் அரசாங்கத்துக்கு சொந்தமான பொருளாதார நிறுவனங்களை தனியார்மயப்படுத்தம் அதன் திட்டத்தை அரசாங்கம் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்போகின்றது. அரசாங்கத்தின் இந்த முன்னெடுப்பை சமூகத்தின் சில பிரிவுகள் பாராட்டுகின்றன. அரசாங்கப் பணம் விரயமாவதை தடுப்பதற்கும் அந்த தேசிய சொத்துக்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் தனியார்மயமே வழி என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இலாபத்தில் இயங்குகின்ற சிறிலங்கா ரெலிகோம் போன்ற நிறுவனங்கள் கூட தனியார்மயமாக்கப்பட்டால் மேலும் கூடுதல் இலாபத்தைப் பெருக்கும் என்று நம்பப்படுகிறது. அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புக்களில் இருப்பவர்களின் அந்தரங்க காரியங்கள் மூலமாக அன்றி போட்டி கேள்விப்பத்திரங்கள் கோரல் மூலமாக இந்த தனியார்மய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை உறுதிசெய்வது அவசியமாகும். ஊழலை கையாளும் விடயத்தில் நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் பெரிய எதிர்பார்ப்புகள் காணப்படுகின்றன.



### இன்னொரு உலகம்

மறுபுறத்தில், பணியாளர்களின் எண்ணிக்கையில் குறைப்புச் செய்யப்படக்கூடிய சாத்தியம் இருப்பதால் அரச நிறுவனங்களை விற்பனை செய்யும் அரசாங்கத்தின் மறுசீரமைப்பு முயற்சிகள் தொடர்பில் அவற்றினால் பாதிக்கப்படக்கூடியவர்கள் மத்தியில் எதிர்காலம் பற்றிய அச்சவுணர்வு காணப்படுகிறது. பொருளாதார மறுசீரமைப்பு செய்முறையில் அரச நிறுவனங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது. தாராளமாக மேலதிகவேலை நேரக் கொடுப்பனவுகளைப் பெற்று சௌகரியமாக செய்துவந்த தொழில்களில் இருந்து அவர்கள் விலகவேண்டிவரும்.

ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத் தரத்துக்கு பழக்கப்பட்டுவிட்ட தங்களது குடும்பங்களை எவ்வாறு வாழவைப்பது என்று அந்த ஊழியர்கள் அச்சமடைவது இயல்பானதே. நிகர உள்நாட்டு உற்பத்தியின் வெறுமனே 0.6 சதவீதத்தை மாத்திரமே சமூக செலவினங்களுக்கான மட்டமாக (Social Spending Floor) நாணய நிதியம் விதந்துரைத்திருக்கிறது. இந்த அளவு கேள்விக்குரியதாகும். இது ஏனைய வளர்முக நாடுகளில் காணப்படும் 1.6 சதவீத சராசரி சமூக செலவின மட்டத்தை விடவும் மிகவும் குறைவானதாகும்.

கடந்த வருடத்தைய பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து அத்தியாவசிய பாவனைப் பொருட்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக இரண்டு, மூன்று மடங்கு உயர்ந்த விலைகளினால் சனத்தொகையின் சகல பிரிவுகளும் பாதிக்கப்பட்டன. ஆனால், வறியவர்களை அது கூடுதலாகப் பாதித்தது. இலட்சக்கணக்கானவர்களை அது வறுமை நிலைக்கு தள்ளியது. கடந்த மூன்று வருடங்களில் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளோரின் எண்ணிக்கையில் கடுமையான அதிகரிப்பு ஏற்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன.

2019 ஆம் ஆண்டில் சுமார் 30 இலட்சம் பேர் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்ந்தனர். ஆனால் 2022 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 96 இலட்சமாக அதிகரித்தது. இது சனத்தொகையின் 42 சதவீதமாகும். சனத்தொகையின் சுமார் 70 சதவீதமானவர்கள் தங்களின் உணவின் அளவைக் குறைக்க நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் ஆய்வுகள் கூறின. தங்களுக்கு தேவையான மருந்து விநியோகங்களை பெறமுடியாமல் போன பெரும் எண்ணிக்கையான மக்கள் எதிர்நோக்கிய இடர்பாடுகள் குறித்து ஊடகங்களில் பல விபரங்கள் வெளியாகின.

அத்தகைய விரக்தியான நிலைவரமே நாட்டின் பலபகுதிகளிலும் இருந்து வாழ்வின் சகல துறைகளையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களை கொழும்பிலும் வேறு பாகங்களிலும் அரசாங்கத்துக்கு எதிராக வீதிகளில் இறங்கவைத்தது. தங்களது பாதுகாப்பான எதிர்காலத்துக்காக கடுமையாக உழைத்த பலர் நிர்க்கதிக்குள்ளாகினர். தனது மூன்று பிள்ளைகளும் பாடசாலைக்கு போகும்போது முன்னர் தினமும் காலையில் ஒவ்வொருவருக்கும் ஒரு பக்கட் பிஸ்கெட்டும் ஒரு பக்கட் பாலும் கொடுத்ததாகவும் ஆனால் இப் போது அவ்வாறு செய்யமுடியவில்லை என்று என்னிடம் ஒரு முச்சக்கரவண்டி சாரதி கூறினார். தன்னால் ஏன் அவ்வாறு செய்யமுடிய வில்லை என்பதை இளைய இரு பிள்ளை களுக்கும் விளங்கிக்கொள்ளவும் முடிய வில்லை என்றும் அவர் புலம் பினார்.

**அரசாங்கத்தை விமர்சிப்பதோ அல்லது அரசாங்கத்துக்கு எதிராக அணிதிரட்டலை செய்வதோ கூட பயங்கரவாதமாகக் கருதப்படக்கூடியதாக பரந்ததாக அது வரையப்பட்டிருக்கிறது. எந்தவொரு பொலிஸ்காருக்கும் அல்லது எந்தவொரு பாதுகாப்புபடை அதிகாரிக்கும் ஒரு நபரையும் அவர் உறுப்புரிமையைக் கொண்டிருக்கக்கூடிய முழு குழுவை அல்லது அமைப்பை கைதுசெய்வதற்கு அதிகாரமளிக்கப்படுகிறது.**

### மோதுகின்ற உலகங்கள்

இன்று இலங்கையில் மக்கள் இரு வேறு உலகங்களில் வாழ்கிறார்கள். ஒரு பிரிவு மக்களினால் நெருக்கடியை வெற்றி கொண்டு வாழ முடிகிறது. மற்றைய பிரிவினர் நெருக்கடிக்குள் மூழ்கடிக்கப்படுகிறார்கள். பொருளாதார வளர்ச்சியின் இயந்திரம் என்று கூறிக்கொண்டு தனியார் துறைக்கு கூடுதல் வளங்களை அரசாங்கம் வழங்குவதை சர்வதேச நாணய நிதியம் ஆதரிக்கிறது. அவர்களுக்கு 2025 வரை புதிய சொத்துவரியோ, செல்வவரியோ அல்லது மரபுரிமைச்சொத்து வரியோ இல்லை. ஆனால் வறிய பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் உடனடியாக வரிகளைச் செலுத்தவேண்டும் என்று கேட்கப்படுகிறார்கள். அவர்கள் மறைமுக வரிகளின் ஊடாக வரிசெலுத்திக் கொண்டிருக்கிறார்கள். நேரடி வரிகளை விடவும் மறைமுக வரிகளே அரசாங்கத்திற்கு மிகவும் பெரியளவில் வருவாயைக் கொடுக்கின்றன.

புதிய வரிவருவாயில் பெரும் பகுதி பெறமதி சேர் வரிகளில் (Value Added Tax -- VAT ) இருந்தே கிடைக்கிறது. இந்த வரி 2022 ஆம் ஆண்டு மே மாதம் 8 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாகவும் பிறகு செப்டெம்பரில் 15 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்டது. இது பணக்காரர்களையும் வறியவர்களையும் சமமாகப் பாதிக்கிறது. வறிவர்களின் கொள்வனவு ஆற்றலை குறைக்கிறது.

பொருளாதாரம் சீரடைந்து வருகிறது என்றும் அதனால் எதிரணி அரசியல்வாதிகள் அரசாங்கத்தில் இணைந்துகொள்வதற்கு வரிசையில் நிற்கிறார்கள் என்றும் அரசாங்கத்தினால் வலுவான சமூக ஊடகப் பிரசாரம் ஒன்று முன்னெடுக்கப்படுகிறது. இந்த பிரசாரம் வறுமைக்கோட்டுக்கு மேல் உள்ளவர்கள் மற்றும் தற்போதைய விலைகளில் பொருட்களை வாங்குவதற்கு கட்டுப்படியாகக்கூடியவர்கள் மத்தியில் எடுபடுகிறது. ஆனால் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு யதார்த்தநிலை தெரியும். மிகுந்த இடர்பாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் அவர்களை எந்தளவு சமூக ஊடகப் பிரசாரத்தினாலும் நம்பவைக்கமுடியாது.

மின்சாரக் கட்டண உயர்வின் சுமை விகிதாசார அடிப்படையில் நோக்கும் போது தனவந்தர்களை விடவும் வறியவர்கள் மீதே பெருந்தாக்கத்தை செலுத்துகிறது. அடிமட்டத்தில் இருப்பவர்கள் முன்னர் செலுத்திய மினசாரக் கட்டணங்களையும் விட மூன்று -- நான்கு மடங்கு கட்டணத்தை இப்போது செலுத்துகின்ற அதேவேளை அதி உயர்மட்டத்தில் உள்ளவர்கள் இரண்டு மடங்கு கட்டணத்தையே செலுத்துகிறார்கள். அண்மையில் பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் கணிசமானளவுக்கு குறைக்கப்பட்ட அதேவேளை வறிய குடும்பங்களின் எரிபொருளான மண்ணெண்ணெயின் விலையில் அத்தகைய அளவுக்கு குறைப்பு செய்யப்படவில்லை. பொருளாதார பிரமிட்டின் அடிமட்டத்தில் உள்ளவர்கள் அரசாங்கம் அதன் பொருளாதாரக் கொள்கைகளை மாற்றவேண்டும் என்று விரும்புவார்கள் என்பதையோ இல்லையேல் தேர்தலை நடத்தி அரசாங்கம் வீட்டுக்கு போக வேண்டும் என்பதையோ விரும்புவார்கள் என்பதை சொல்லவேண்டியதில்லை.

தேர்தலை நடத்துவதல்ல, பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே தனது முன்னுரிமைக்குரிய பணி என்ற நிலைப்பாட்டை ஜனாதிபதி விக்கிரமசிங்க திரும்பத்திரும்ப கூறியிருக்கிறார். எதிர்ப்பு வாக்கு அலை தன்னை வந்து தாக்கும் என்பததையும் அதனால் ஆட்சியின் நியாயப்பாடின்மை மேலும் அதிகரிக்கும் என்பதையும் அரசாங்கம் அறியும். புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் மூலமாக அரசாங்கம் அதன் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்த நாட்டம் கொண்டிருக்கிறது. இன்னமும் வரைவு வடிவத்திலேயே இருக்கும் அந்த சட்டத்தின் மூலமாக பெருமளவு கண்டனத்துக்குள்ளான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பதிலீடு செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

தேசிய பாதுகாப்புக்கானது என்று கூறப்படுகின்ற இந்த சட்டவரைவு அறகலயவுக்கு பின்னரான சூழ்நிலைகளில் வரையப்பட்டது. அரசாங்கத்தை விமர்சிப்பதோ அல்லது அரசாங்கத்துக்கு எதிராக அணிதிரட்டலை செய்வதோ கூட பயங்கரவாதமாகக் கருதப்படக்கூடியதாக பரந்ததாக அது வரையப்பட்டிருக்கிறது. எந்தவொரு பொலிஸ்காருக்கும் அல்லது எந்தவொரு பாதுகாப்புபடை அதிகாரிக்கும் ஒரு நபரையும் அவர் உறுப்புரிமையைக் கொண்டிருக்கக்கூடிய முழு குழுவை அல்லது அமைப்பை கைதுசெய்வதற்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

இரு உலகங்கள் மோதுவதற்கு தயாராகும் ஆபத்தான அறிகுறிகள் தெரிகின்றன. பொருளாதார மீட்சியை காரணம் காட்டி தேசிய நலனுக்கு மேலாக தற்பாதுகாப்பு முன்னுரிமை பெறுவதாகவும் ஜனநாயக ஆட்சிமுறையை எதேச்சாதிகார ஆட்சிமுறை பதிலீடு செய்வதாகவும் தோன்றுகிறது. ●

# சோழர்களின் ஆட்சி: இலங்கையின் தமிழர் பகுதிகள் எவ்வாறு இருந்தன?

ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கையை சோழர்கள் கி.பி. 993ல் இருந்து சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்துள்ளதாக வரலாறு கூறுகின்றது.

இந்த நிலையில், சோழர்களின் இலங்கை வரலாறு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

சோழ மன்னனான முதலாம் ராஜராஜன், கி.பி. 993ம் ஆண்டில் இலங்கை மீது படையெடுத்துள்ளார்.

இவ்வாறு இலங்கையை கைப்பற்றிய சோழர்கள், அநுராதபுரத்தை தலைநகராக பயன்படுத்தியுள்ளனர்.

அநுராதபுரம் உள்ளிட்ட இலங்கையின் வட பகுதி முழுவதும் சோழர்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

பின்னரான காலத்தில் அநுராதபுரத்தை கைவிட்ட சோழர்கள், பொலன்னறுவையை தமது ஆட்சியில் தலைநகராக அறிவித்துள்ளனர்.

அதன்பின்னர், கி.பி. 1070ம் ஆண்டு காலப் பகுதியில் ராஜேந்திர சோழன், இலங்கையின் தென் பகுதியையும் கைப்பற்றி, தமது ஆட்சியை இலங்கை முழுவதும் நிலைநிறுத்தியிருந்தார்.

சோழர்களின் இலங்கை வரலாறு அதன் ஊடாக மிக முக்கிய பங்கை வகிக்கின்றது.

தமது ஆட்சியை இலங்கையில் உறுதிப்படுத்திய சோழர்கள், தமிழ் மொழியை அரச மொழியாகவும், சைவ மதத்தை அரச மதமாகவும் அறிவித்து ஆட்சி செய்துள்ளனர்.

இதன் அடையாளங்களாக, இன்றும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் சோழர்களினால் நிர்மாணிக்கப்பட்ட சிவன் ஆலயங்கள் மற்றும் கல்வெட்டுகளை காண முடிகின்றது.

குறிப்பாக பொலன்னறுவை பகுதியில் சோழர்களின் சிவன் ஆலயங்கள், கட்டடங்கள் மற்றும் கல்வெட்டுகளை அதிகளவில் காண முடிகின்றது.

இது தொடர்பில் ஆராய்வதற்காக, பொலன்னறுவை பகுதிக்கு பயணம் மேற்கொண்டபோது:

பொலன்னறுவை நகரம் ஆரம்பிக்கும் எல்லை பகுதியிலேயே, சோழர்களின் அடையாளமாக திகழ்ந்த சிவன் ஆலயங்களின் சிதைவுகளை காண முடிகிறது.

சிவலிங்கம், சிவன் ஆலயத்தின் சிதைவுகள், கட்டடத்தின் சிதைவுகள் என பல்வேறு சோழர்களின் அடையாளங்களை பொலனறுவை எல்லை பகுதியில் காண முடிந்தது.

இந்த அனைத்து வரலாற்று சான்றுகளையும், இலங்கை தொல்பொருள் திணைக்களம் முறையாக பராமரித்து வருவதையும் கவனிக்க முடிந்தது.

அதேபோன்று, பொலன்னறுவை நகருக்குள் சென்றால், சோழர்களால் நிர்மாணிக்கப்பட்ட மேலும் பல ஆலயங்கள், கட்டடங்கள் ஆகியவற்றின் சிதைவுகளை, தொல்பொருள் திணைக்களம் பராமரித்து வருவதை அவதானிக்க முடிந்தது.

அதேபோன்று, சோழர்களினால் நிர்மாணிக்கப்பட்ட சிவன் ஆலயமொன்றில் இன்றும் பூஜை வழிபாடுகள் நடத்தப்பட்டு வருவதை கவனிக்க முடிந்தது.

இந்த ஆலயத்தில் சிவலிங்கமொன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கு பூஜைகள் நடத்தப்பட்டிருந்ததையும் பார்க்க முடிந்தது.




பொலன்னறுவை என்பது தற்போது பெரும்பாலும் சிங்கள மக்கள் வாழக்கூடிய பகுதியாக உள்ளது.

பௌத்த அடையாளங்கள் பொலன்னறுவை பகுதியில் பெரும்பாலும் காணப்பட்ட போதிலும், சோழர்களின் அடையாளமாக காணப்படுகின்ற சிவன் ஆலயங்கள் உள்ளிட்ட கட்டடங்கள் மற்றும் கல்வெட்டுக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில், சோழர்கள் இலங்கையின் தமிழர் பகுதிகளை எவ்வாறு ஆட்சி செய்தார்கள் என்பது தொடர்பிலும் ஆராய்ந்தோம்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வரலாற்று துறை






சிரேஷ்ட பேராசிரியர் பரமு புஸ்பரட்ணத்தை சந்தித்து நாம் வினவினோம்.

'சமீபமாக சில நம்பிக்கைவாய்ந்த ஆய்வுகளை பார்க்கின்ற போது, பொலன்னறுவையிலிருந்து சோழர்களின் ஆட்சி மறைந்தாலும், தமிழ் பிரதேசங்களிலே அவர்களின் ஆட்சி மேலோங்கியிருந்தது. தொடர்ந்தும் ஐரோப்பிய காலம் வரை நிலவியது என்பதை உறுதிப்படுத்தக்கூடிய பல நம்பகரமான கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக திருகோணமலை - கோமாரன்கடவலை என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு, பொலன்னறுவையிலிருந்து சோழர் ஆட்சி மறைந்தாலும், அவர்களுடைய ஆட்சி அங்கிருந்த தமிழர்களோடு இணைந்ததாக இருக்கலாம்.

இவர்களின் ஆட்சி கிழக்கிலங்கையில் தொடர்ந்து இருந்தது என்றும், அந்த காலக் கட்டத்திலே தமிழ் பிரதேசங்கள் மண்டலம், வள நாடு, நாடு, கூற்றம், பற்று என்ற பெயர்களினால் நிர்வகிக்கப்பட்டதையும், அப்பிரதேசங்களில் சில இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டது பற்றிய செய்திகளையும் அது கொடுப்பதாக காணப்படுகின்றது.

சோழர் ஆட்சி முடிந்ததன் பின்னர் சோழர் ஆட்சியோடு வந்த படை வீரர்கள், கலைஞர்கள், பிராமணர்கள், ராணுவ வீரர்கள், நிர்வாகிகள் மீண்டும் தமிழகத்திற்கு செல்லாது, இலங்கையில் நிரந்தரமாக தங்கிக் கொண்டமையினால் தமிழர்கள் வாழ்ந்த பிரதேசத்தில் மேலும் மக்கள் தொகை அதிகரித்தது என்ற ஒரு கருத்தை பேராசிரியர் அரசரட்ணம் மிக ஆழமாக முன்வைக்கின்றார்.

1964ம் ஆண்டு முன்வைத்த கருத்து உண்மை என்பதை இப்போது கோமாரண்கடவலை, கோடலிபறிச்சான், முல்லைத்தீவில் பெரிய பற்று போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் சோழர் ஆட்சியில் செல்வாக்கு பெற்ற படைவீரர்கள், இங்கிருந்த சுதேச மக்களோடு சேர்ந்தோ, தனித்தோ அதிகாரம் பெற்றிருந்ததையும் அந்த வழி வந்தவர்களே வன்னி சிற்றரசர்கள் என்றும் அந்த கல்வெட்டுக்கள் கூறுவதாக இருந்தது.

பொதுவாக வரலாற்று இலக்கியங்களிலும், கனிசமான கல்வெட்டுக்களிலும் பொலன்னறுவையும், கிழக்கிலங்கையும், மாதோட்டம் வட இலங்கை பற்றிய பல செய்திகள் காணப்பட்டாலும், இந்த சோழருடைய ஆட்சி யாழ்ப்பாணத்தில் செல்வாக்கு பெற்றிருக்கலாம் என்பதற்கும் சில கல்வெட்டு ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன.

குறிப்பாக யாழ்ப்பாணம் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட ராஜேந்திர சோழனின் கல்வெட்டு, இங்கிருந்த ஒரு ஆலயத்திற்கு இலுப்பை பால், நெல், ஆடு என்பவற்றை ராஜேந்திர சோழன் காலத்தில் தானமாக வழங்கப்பட்ட செய்தியொன்றை சொல்வதாக காணப்படுகின்றது.

அதேபோன்று உரும்புராய் பகுதியில் பிள்ளையார் ஆலயமொன்றிலிருந்து இரண்டு கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் சோழ வம்சத்தை, சோழ நாட்டை நினைவுப்படுத்தக்கூடிய தனிநபர் பெயர்களும், ஆட்களின் பெயர்களும் காணப்படுகின்றன. குறிப்பாக வரணியில் சோழர் மாசேடி, செம்பியன்பற்று போன்றவை சோழர்களின் காலங்களில் முன்னிலைப் படுத்தப்பட்ட பெயர்களாக காணப்படுகின்றன.

சோழர் அநுராதபுரத்தை வெற்றிக் கொள்வதற்கு முன்னர், அவர்களுடைய ஆதிக்கம் வட இலங்கையின் யாழ்ப்பாணத்தில், திருகோணமலையில் முதலில் ஏற்பட்ட பின்னரே, அநுராதபுரம் அரசை வெற்றிக் கொண்டு, பொலன்னறுவையை தலைநகராக்கிக் கொண்டார்கள் என்பது பேராசிரியர் இந்திரபாலாவின் கருத்தாகும்.

அவ்வாறான நிகழ்வுகள் ஏற்பட்டிருக்கக் கூடிய சான்றுகளும் சிங்கள இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆகவே சோழர் ஆட்சிக்கு முன்னரே இலங்கை தமிழர் இடையே ஒரு வலுவான ராணுவ அரச மரபு தோன்றியுள்ளது.

அதன்பின்னர் ஏற்பட்ட சோழர்களின் ஆட்சி, பெரும்பாலும் வடகிழக்கு இலங்கை, தமிழர்களின் பராம்பரிய பிரதேசம் என்ற கருத்தை மேலும் வலுப்படுத்த உதவியதாக காணப்படுகின்றது," என வரலாற்று துறை சிரேஷ்ட பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் தெரிவிக்கின்றார். (பிபிசி)



# பேராசிரியர் க. கைலாசபதி யாழ்ப்பாண வளாக முதல் தலைவர் பிறந்து 90 ஆண்டுகள்

கா. இந்திரபாலா

யாழ்ப்பாணத்தில் ஒரு நவீன பல்கலைககழக நிலையிலான நிறுவனத்தை அமைப்பதற்கு 200 ஆண்டுகளுக்கு முன்னரே முயற்சி எடுக்கப்பட்டது. கலாநிதி டனியெல் புவரை (**Dr.Daniel Poor**) லைவராக்கொண்டு, 1822இல் வட்டுக்கோட்டையில் **Batticotta Seminary** என்ற பெயருடன் மேற்கத்திய பல்கலைக்கழகங்களின் கல்விமுறையை ஒத்த ஒரு கல்வித்திட்டத்தை நடைமுறை படுத்தும் நிறுவனம் ஒன்று அமைக் கப்பட்டது. அங்கு செயலாற்றி யவர்கள் அதற்கு அக்காலப் பிரித் தானிய அரசிடம் இருந்து பல்கலைக்கழக அங்கீகாரத்தைப் பெறும் நோக்கத்தைக் கொண்டிருந்தனர். ஆனால் அந்த நோக்கம் நிறைவேறப் பல தடைகள் இருந்தன. எனினும், செமினரி பின் யாழ்ப்பாணக் கல்லூரியாக மாறிய நிறுவனத்தில் பல்கலைக் கழகப் பட்டத்தைப் பெறுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டன.

வட்டுக்கோட்டைசெமினரி நிறுவப்பட்டு 150 ஆண்டுகளின் பின்னர் தான் யாழ்ப்பாணத்தில் அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழக நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டது. அதுதான் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகம். 1974 இல் அது திறக்கப்பட்டபோது ஒரு வரலாற்று முக்கியத்துவம் உடைய நிகழ்ச்சியாக அது அமைந்தது. அந்த உயர்கல்வி நிறுவனத்தின் முதலாவது தலைவராக கைலாசபதி நியமிக்கப்பட்டார்.

### பிறப்பும்படிப்பும்

கைலாசபதி பிறந்த இடம் இன்றைய மலேசியாவின் தலைநகராகிய கோலாலம்பூர். தந்தையார் இளையதம்பி கனகசபாபதி. கைலாசபதி 1933 ஏப்ரல் 5 இல் பிறந்தார். இவர் கோலாலம்பூர் விக்டோரியா நிறுவனத்தில் கல்வி கற்கத்தொடங்கிய காலத்தில் இரண்டாவது உலகப் போர் ஆரம்பித்தது.



பிரித்தானியரை எதிர்த்துப் போராடிய ஜப்பானியர் 1942இல் சிங்கப்பூரைக் கைப்பற்றிய பின், கோலாலம்பூர் அவர்கள் ஆட்சிக்கு உட்பட்டது. இந்நிலையில் கைலாசபதியின் கல்வி பாதிக்கப்பட்டது. 1945 இல் போர் முடிவுற்றதும் தாயார் தில்லைநாயகியுடன் கைலாசபதி இலங் கைக்குச் சென்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

புதிதாகத் திறக்கப்பட்ட பேராதனை வளாகத்தின் கலைப்பீடத்துக்கு 1953இல் முதலாண்டு மாணவர்களாக நேராகச் சென்ற மாணவர் குழுவில் (அதற்கு முன் கலைப்பீடம் தற்காலிகமாகக் கொழும்பில் இயங்கியது) கைலாசபதியும் ஒருவராவர்.

கலைமாணிப் பட்டத்தைப் பெற்றபின் கைலாசபதி தினகரன் பத்திரிகையின் ஆசிரியர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்டு, ஓராண்டு செல்லுமுன் அச்செய்திதாளின் பிரதம ஆசிரியராக உயர்வு பெற்றார்.

இலக்கிய வளர்ச்சியில் அவருக்கு இருந்த பேரார்வம் அவரைப் பல்கலைக் கழகத்துக்கு ஈர்த்தது. இதனால் 1961இல் ஊடகத்துறையை விட்டு, இலங்கை பல்கலைக்கழகத்தில் விரிவுரை ஆற்றவும் ஆய்வு நடத்தவும் தொடங்கினார்.

### வளாகத் தலைவர்

1970ஆம் ஆண்டுத் தேர்தலை அடுத்து நாட்டில் பல தீவிர மாற்றங்கள் இடம் பெற்றன. அவற்றுள் ஒன்றாக எல்லாப் பல்கலைக் கழகங்களும் ஒன்றிணைக்கப்பட்டு, தனிப் பல்கலைக் கழகங்களாக இருந்தவை இலங்கைப்பல்ககலைக்கழகம் என்ற ஒரு நிறுவனத்தின் வளாகங்களாக மாற்றப்பட்டன.

எல்லாப் பல்கலைக் கழகங்களையும் ஒன்றாக இணைத்தமை பல்கலைக் கழகக் கல்வித்துறை தொடர்பாக அரசாங்கம் எதிர்நோக்கிய பாரிய சவால்களைச் சமாளிப்பதற்கு உதவவில்லை. அரசாங்கத்தால் இலகுவில் தீர்க்கமுடியாத பிரச்சினைகள் பல எழுந்திருந்தன. நீண்டகாலத் திட்டம் எதுவுமின்றி உயர்கல்வி நிறுவனக்களை வளரவிட்டமை அரசாங்கத்துக்குப் பெருந்தாக்கத்தை உண்டுபண்ணியது. படிப்படியாக நாட்டில் கூடுதலான மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் செல்லத் தகுதி பெற்றிருந்தும் பல்கலைக் கழகத்தில் அவர்களுக்கு இடம் இருக்க வில்லை. இந்நிலையில், அரசாங்கம் 1974 இல் ஒரு பல்கலைக்கழக வளாகத்தை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு தீர்மானித்தது.

திருநெல்வேலியில் இருந்த பரமேஸ்வராக் கல்லூரி மூடப்பட்டு, அதன் காணியும் கட்டடங்களும் புதிய வளாகத்தின் ஒரு பீடத்தைத் தொடக்குவதற்குக் கொடுக்கப்பட்டன.

அரசாங்கத்துக்குப் பரவலாக வட இலங் கையில் பலத்த எதிர்ப்பும் காணப்பட்டது. பல்கலைக்கழகம் ஒன்றைத் தொடக்குவதற்குச் சாதகமான நிலைமை அப்பொழுது யாழ்ப்பாணத்தில் காணப்படவே இல்லை. இத்தகைய ஒரு சூழ்நிலையில் தான் கைலாசபதி வளாகத்தின் நிர்வாகப்பொறுப்பைத் தைரியமாக ஏற்றார். அவருடைய அயராத உழைப்பின் மூலம் வெகு விரைவில் யாழ்ப் பாண மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றார்.

### வளாகத்தின் வளர்ச்சி

வளாகம் இரண்டு பீடங்களுடன் தொடக்கப்பட்டபோது ஒரு சில துறைகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தன. எனினும், மூன்று ஆண்டுகள் செல்லுமுன் புதிய துறைகளை அமைத்து, புதிய கட்டட வேலைகளைத் தொடங்கி, ஒரு பல்கலைக்கழகத்துக்குத் தேவைப்பட்ட அத்திவார வேலைகளைச் சிறப்புறச் செய்து, தகைமை பெற்ற ஆசிரியர்கள் நாடிவரும் சூழ்நிலையை உருவாக்கிப் புதிய நிறுவனத்துக்கு வேண்டிய அங்கீகாரத்தைக் கைலாசபதி பெற்றுக்கொடுத்தார்.

கைலாசபதி 1977இல் பதவியைவிட்டு அமெரிக்கா செல்லுமுன் ஒரு பல்கலைக் கழகத்துக்குரிய அடித்தளம் நன்கு அமைக்கப்பட்டது. 1978இல் யாழ்ப்பாண வளாகம் ஒரு முழுமையான யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமாக உயர்வு பெற்றது.

1978இல் கைலாசபதி அமெரிக்காவில் இருந்து திரும்பியபின் தமிழ்ப்பேராசிரியராகவும் கலைப்பீட அதிபராகவும் கடமை ஆற்றிக் கொண்டிருந்தபோது 1982இல் திடீரென நோய்வாய்ப்பட்டுக் கொழும்பில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது காலமானார்.






# மட்டக்களப்பில் சிங்கள எம்.பி. ஒருவரை உருவாக்கவே மயிலந்தனை குடியேற்றம்!

## கலையரசன் எம். பி. சுட்டிக்காட்டு



மட்டக்களப்பு, ஏப். 05

**“மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள உறுப்பினர் ஒருவரை உருவாக்கவே மாதவனை மயிலந்தனை சிங்கள குடியேற்றம் திட்டமிட்டு அரங்கேறி வருகிறது. இதற்கு ஆளுநர் உரம் போடுகிறார்.”**

**-இவ்வாறு தெரிவித்தார் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- மட்டக்களப்பு மாவட்டத்தில் 76 வீத தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். அங்கே இதுவரை சிங்கள பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது மாகாண சபை உறுப்பினரோ இல்லை. எதிர் காலத்தில் அங்கு சிங்கள உறுப்பினர் ஒருவரை உருவாக்குவதற்காகவே தமிழ் மக்களின் விவசாய பிரதேசமான மாதவனை மயிலந்தனையில் சிங்கள குடியேற்ற திட்டத்தை ஆளுநர் தொடக்கம் அரசாங்கம் வரை செய்து வருகிறது.

யுத்தம் மௌனித்து 14 வருடங்கள் முடிந்து விட்டது. ஆனால் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் எதனையுமே செய்து முடிக்கவில்லை.

இந் நிலையில் எங்கள் மீது பலர் விமர்சனம் செய்ய தொடங்கி இருக்கிறார்கள். நாங்கள் ஒருபோதும் வீதி போட்டுத் தருவோம், வீடு கட்டித் தருவோம் என்று வாக்கு கேட்டதில்லை. நாம் தந்தை செல்வா வழியிலே அஹிம்சை வழியில் உரிமைகளை பெற ஒற்றுமையாக அரசியல் பயணத்தில் பயணிக்கின்றோம். எமது தமிழ் மக்கள் சொந்தமண்ணிலே சுதந்திரத்துடன் வேண்டும் என்ற ரீதியில் நாங்கள் அகிம்சை வழியில் போராடி வருகின்றோம்.

சிங்கள பேரினவாதம் ஜனநாயகம் என்ற போர்வையில் அதனை திட்டமிட்டு நாசூக்காக சிங்களவர்களை குடியேற்றுவதற்கு ஆளுநரைப் பயன்படுத்தி வருகின்றது.

மாதவனை மயிலந்தனைபகுதியில் தமிழர்கள் காணியை அடாத்தாக பிடித்து சிங்களவர்களுக்கு கொடுப்பதற்கு காணி அளக்கப்பட்டு வருகின்றது.

இன்று தமிழ் மக்களின் பிரச்னை தீர்ப்போம் என்று ஜனாதிபதி ரணில் முன்வந்திருக்கின்றார். உண்மையில் அவர் அப்படி செய்வாராக இருந்தால் இலங்கை அரசியல் அரங்கில் ஒரு பொருத்தமான நீதியான மாபெரும் தலைவர் ரணில் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம்.

துரதிஷ்டவசமாக இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் நீண்ட காலமாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்திருக்கின்றார்கள். அதன் காரணமாகவே தமிழ் மக்களால் யாரையும் நம்ப முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது-என்றார். (அ)

# காரைதீவில் இலவச உரம் விநியோகம்!




அக்கரைப்பற்று, ஏப். 05

காரைதீவு கமநல கேந்திர நிலையத்திற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக ரி.எஸ்.பி அடிக்கட்டுப்பசளை விநியோகம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மா. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் கலந்து கொண்டார்.

காரைதீவு பிரதேச விவசாய போதனாசிரியை திருமதி சஜிகலா ரகுநந்தன் உள்ளிட்ட விவசாய அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டார்கள்.

காரைதீவுப்பிரவேசத்தில் உள்ள 472 ஹெக்ரேயர் காணிகளையுடைய 364 விவசாயிகளுக்கு 26ஆயிரம் கிலோகிராம் ரி.எஸ்.பி உரம் வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மாநகர சபை எல்லைக்குள் மாட்டிறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை

அக்கரைப்பற்று, ஏப். 05

கல்முனை மாநகர சபை எல்லையினுள் புனித ரமழான் நோன்பு காலத்தை முன்னிட்டு, மாட்டிறைச்சியை கட்டுப்பாட்டு விலையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் கடந்த திங்கட்கிழமை இறைச்சிக் கடை உரிமையாளர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின்போது இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஒரு கிலோ கிராம் தனி இறைச்சியை 2000 ரூபாவுக்கும் 200 கிராம் முள் சேர்க்கப்பட்ட ஒரு கிலோ கிராம் இறைச்சியை 1800 ரூபாவுக்கும் விற்பனை செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்விலைப்பட்டியலை அனைத்து இறைச்சிக் கடைகளிலும் காட்சிப்படுத்தும் பொருட்டு குறித்த விலைப்பட்டியல் ஆணையாளரினால் இறைச்சிக் கடைகளின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், கணக்காளர் கே.எம்.றியாஸ், பொறியியலாளர் ஏ.ஜே.ஹலீம் ஜௌஸி, கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ.வட்டபொல, வருமான வரி பரிசோதகர்களான ஏ.ஜே.சமீம், எம்.சலீம், எம்.எஸ்.எம்.உபைத், எம்.ரி.சப்னம் சாஜிதா மற்றும் எல்.எம்.சாதிக் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் பங்கேற்றனர். (அ)

# இலவசப் பயிற்சி புத்தகங்கள் விநியோகிக்கும் 2ஆம் கட்டம்



அக்கரைப்பற்று, ஏப். 05

பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பயிற்சி புத்தகங்கள் விநியோகம் செய்யும் இரண்டாம் கட்ட நிகழ்வு (02) நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணியளவில் சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சுமார் 65 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்ட இந்நிகழ்வில், சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகாவித்தியாலய அதிபர் திருமதி ரிப்கா அன்சார், பிரதி அதிபர் ஏ.எல்.எம்.தன்சில் மற்றும் கிரேட் ருமாறோ அமைப்பின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (அ)

# ‘பெண்மையை போற்றுவோம்’ தொனிப்பொருளில் நிகழ்வு

திருமலை, ஏப். 05

திருகோணமலை அன்பின் பாதை சமூகம் மற்றும் எண்ணம் போல் வாழ்க்கை இணைந்து நடத்திய “பெண்மையை போற்றுவோம்” எனும் தொனிப்பொருளில் சர்வேதச மகளிர் தின நிகழ்வும், மகுடம் வழங்கும் சிறி ரஞ்சனியின் (கனடா) “ஒன்றே வேறே” சிறுகதை நூல் வெளியீடும் திருகோணமலை குளக்கோட்டம் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

திருகோணமலை பாரதி தமிழ் வித்தியாலய அதிபர் திருமதி சுஜந்தினி யுவராஜா தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வுக்கு திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.சிறிபதி, கிண்ணியா தள வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி இந்திரமதி வேதநாயகம் மற்றும் சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவகுமார் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் ஆபத்தெனில் அது மாற்றப்படவேண்டும்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

மட்டக்களப்பு, ஏப். 05

புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில், முன்னர் இருந்த சட்டங்களைப் போன்று ஆபத்தான கூறுகள் காணப்பட்டால் அது திருத்தியமைக்கப்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

ஆரையம்பதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில், அரிசி பகிர்ந்தளிக்கும் நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மியன்மார் அரசாங்கத்திடம் வர்த்தக வாணிபத்துறை அமைச்சு விடுத்தவேண்டுகோளின் அடிப்படையில் வழங்கப்பட்ட அரிசி, நாட்டின் பல பாகங்களிலும் வறிய நிலையில் உள்ள மக்களுக்கு பகிர்தளிக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திற்காக 9000 அரிசி பொதிகள் வழங்கும் செயற்திட்டத்தில் முதல் கட்டமாக மண்முனை மேற்கு ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட 500 பயனாளிகளுக்கு அரிசிப்பொதிகள் வழங்கப்பட்டன.

அரிசிப் பொதிகளை வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் ஆரையம்பதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதேச செயலக உறுப்பினர்கள், என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# நற்பிட்டிமுனையில் இலவச அரிசி வழங்கல்

அக்கரைப்பற்று, ஏப். 05

அரசின் நலத்திட்ட உதவிகள் பெறுபவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்ட இலவச அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் கல்முனைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நற்பிட்டிமுனை மக்களுக்கு இலவச அரிசி வழங்கும் நிகழ்வு நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கியில் கடந்த 2ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ், சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஏ.எம்.பைசால் உட்பட சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இலவச அரிசி விநியோகம் நற்பிட்டிமுனை சில பிரிவு மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது டன் ஏனைய பிரிவுகளுக்கு தொடராக அரிசி விநியோகம் வழங்கப் படும் என பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தெரிவித்தார். (அ)

# இளம்பெண் வழங்கிய சிலை வெடித்து ரஷ்ய சமூக ஊடகப் பிரபலம் மரணம்!

## தாக்குதலின் பின்னணியில் உக்ரைன்?





மொஸ்கோ, ஏப். 05

**பிரபல ரஷ்ய இராணுவ பதிவர் வால்ட்லென் டாட்டர்ஸ்கி செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் உள்ள ஒரு ஹோட்டலில் வெடிகுண்டு வெடித்ததில் கொல்லப்பட்டார்.**

**இந்த தாக்குதலிற்கு காரணமான 26 வயதான இளம் ரஷ்யப் பெண்ணை, ரஷ்ய புலனாய்வாளர்கள் கைது செய்துள்ளனர்.**

இந்த தாக்குதலின் பின்னணியில் உக்ரைன் செயற்பட்டதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்ட்ரீட் புட் பார் எண். 1 ஹோட்டலில் நடந்த வெடிவிபத்தில் டாட்டர்ஸ்கி கொல்லப்பட்டார் என ரஷ்ய செய்தித் தகவல்கள் தெரிவிக்கின்றன. 25 பேர் காயமடைந்தனர். அவர்களில் 19 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பிராந்திய ஆளுநர் அலெக்சாண்டர் பெக்லோவ் தெரிவித்தார்.

டெலிகிராமில் 560,000 க்கும் மேற்பட்ட பின்தொடர்பவர்களைக் கொண்டுள்ள மாக்சிம் போமின் டின்பவர் டாட்டர்ஸ்கி என்ற பெயரிலேயே செயற்படுகிறார். உக்ரைனில் ரஷ்யாவின் போர் குறித்த இராணுவ பதிவர்களில் மிக முக்கியமானவர். அவர் உக்ரைன் போரை ஆதரித்தார்.

செயின்ட் பீட்டர்ஸ்பேர்க் இணையத்தளம் ஒன்று, உக்ரைனில் ரஷ்யாவுக்காக போராடும் வாக்னர் குழுவின் நிறுவனரான யெவ்ஜெனி பிரிகோஜின் என்பவருக்கு சொந்தமான ஒரு ஹோட்டலில் இந்த வெடிப்பு நிகழ்ந்ததாகக் கூறியது.

ரஷ்ய ஊடகங்கள் மற்றும் இராணுவ வலைப்பதிவாளர்கள், டாட்டர்ஸ்கி பொது உறுப்பினர்களைச் சந்தித்து வருவதாகவும், ஒரு பெண் அவருக்கு ஒரு சிலையைக் கொடுத்ததாகவும், அது வெடித்ததாகவும் கூறினர்.

நிகழ்வை ஏற்பாடு செய்த ஒரு தேசபக்த ரஷ்ய குழு, பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்ததாகக் கூறியது, ஆனால் "வருந்தத்தக்கது, அவை போதுமானதாக இல்லை என்பதை நிரூபித்தது" என்று கூறியது.

சிறையில் அடைக்கப்பட்ட புடின் விமர்சகர் அலெக்ஸி நவல்னியின் ஆதரவாளர்களின் உதவியுடன் உக்ரைனின் உளவுத்துறையினர் குண்டுவெடிப்பை ஏற்பாடு செய்ததாக ரஷ்யாவின் தேசிய பயங்கரவாத எதிர்ப்புக் குழு தெரிவித்துள்ளது.

அவரது கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட 26 வயதான ரஷ்ய பெண் தர்யா ட்ரெபோவா, உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள வீடியோவில், வெடிகுண்டை தானே வைத்ததாக ஒப்புக்கொண்டார்.

கடந்த கோடையில் மொஸ்கோவிற்கு வெளியே ஒரு தேசியவாத சித்தாந்தவாதியின் மகள் டாரியா டுகினா கார் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட பின்னர், உக்ரைனில் நடந்த மோதலுடன் நெருக்கமாக தொடர்புடைய ஒரு நபர் ரஷ்ய மண்ணில் கொல்லப்படுவது இரண்டாவது படுகொலையாகும்.

(அ)

# பிரான்ஸ் கலவரத்துக்குள் கவர்ச்சி 'போஸ்' சர்ச்சையில் சிக்கினார் பெண் அமைச்சர்!





பாரிஸ், ஏப். 05

பிளேபோய் கவர்ச்சிப் பத்திரிகையின் அட்டைப் படத்துக்கு போஸ் கொடுத்ததால் பிரான்ஸ் நாட்டு பெண் அமைச்சர் ஒருவர் சர்ச்சையில் சிக்கியுள்ளார். இத்தனைக்கும் அவர் நாகரிகமாக முழு உடையுடன்தான் போஸ் கொடுத்துள்ளார். இருப்பினும், ஒரு கவர்ச்சிப் பத்திரிகைக்கு போஸ் கொடுத்து, பேட்டியளித்தது பெண்ணியம் என்று அவர் நினைத்துக் கொண்டார் என அவர் மீது விமர்சனங்கள் எழுந்துள்ளன.

மார்லீன் ஸ்கியாபா பிரான்ஸ் நாட்டின் சமூக பொருளாதாரத் துறை அமைச்சராக இருக்கிறார். 40 வயதான இவர் பெண்ணிய எழுத்தாளரும் கூட. ஏற்கெனவே இவர் பல்வேறு கருத்துகளைக் கூறி சர்ச்சையில் சிக்கியிருக்கிறார்.

இந்நிலையில், தற்போது அவர் பிளேபோய் பத்திரிகைக்கு போஸ் கொடுத்து விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளார்.

பிளேபோய் கவர்ச்சிப் பத்திரிகைக்கு போஸ் கொடுத்துள்ள அவர், பெண்கள் உரிமை, தன்பாலின உறவாளர்கள் உரிமை, கருக்கலைப்பு உள்ளிட்டவை பற்றி 12 பக்க அளவில் ஒரு நீண்ட பேட்டியும் கொடுத்துள்ளார்.

இது பற்றி அவர் தனது ருவிட்டர் பக்கத்தில், "பெண்கள் தங்கள் உடலைக் கொண்டு என்ன செய்ய விரும்புகிறார்களோ, அதைச் செய்யலாம். எங்கேயும், எப்போதும். பிரான்ஸில் பெண்கள் சுதந்திரமாக உள்ளனர். அது சில பழமைவாதிகளுக்கும் நயவஞ்சகர்களுக்கும் உறுத்தலாக இருக்கலாம்" என்று பதிவிட்டுள்ளார்.

அவருடைய இந்த ருவிட்டர் பதிவு அரசாங்கத்தில் இருக்கும் சில அமைச்சர்களையே அதிருப்தியடையச் செய்துள்ளது.

இதனிடையே, பிரான்ஸில் ஓய்வு பெறும் வயதை 62 இல் இருந்து 64 ஆக உயர்ந்தும் அதிபர் மக்ரோனின் ஓய்வூதிய சீர்திருத்த திட்டத்திற்கு எதிராக மக்கள் நடத்தும் போராட்டத்தில் வன்முறை வெடித்தது. தொடர் போராட்டங்கள் காரணமாக பிரான்ஸில் உள்நாட்டு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதமர் எலிசபத் போர்ன், 'இப்போது நாடு இருக்கும் சூழலில் இது தேவையற்றது' என்று தனது அதிருப்தியை மார்லீனிடம் தொலைபேசி வாயிலாகவே தெரிவித்துவிட்டதாக ஏஎப்பி செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

(அ)

# ருவிற்றரின் 'லோகோ'வை மாற்றினார் எலான் மஸ்க்

## நீலக் குருவிக்கு பதிலாக நாய் படம்




நியூயோர்க், ஏப். 05

ருவிற்றர் சமூகவலைத்தள செயலியின் லோகோவை எலான் மஸ்க் மாற்றியுள்ளார்.

ருவிற்றர் என்றாலே நினைவுக்கு வருவது நீல நிறக் குருவி தான். ஆனால் அந்தக் குருவியின் படத்திற்குப் பதிலாக ஒரு நாயின் படத்தை லோகாவாக மாற்றியுள்ளார் எலான் மஸ்க். இருப்பினும் ருவிற்றர் மொபைல் பதிப்பில் இந்த மாற்றம் அமுல்படுத்தப்படவில்லை.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் 44 பில்லியன் டொலருக்கு ருவிற்றர் தளத்தை வாங்கி இருந்தார் மஸ்க். அது முதல் பல்வேறு மாற்றங்களை அவர் மேற்கொண்டு வருகிறார். ப்ளூ டிக் கட்டண சந்தா முறை தொடங்கி பல மாற்றங்கள் இதில் அடங்கும். தளத்தில் தொழில்நுட்ப மாதிரியான அம்சங்கள் மட்டுமல்லாது நிர்வாக ரீதியாகவும் மாற்றங்களை மேற்கொண்டு வருகிறார். ஆட்குறைப்பு நடவடிக்கையும் இதில் அடங்கும்.

இந்நிலையில் யாரும் எதிர்பாராத வகையில் ருவிற்றர் செயலியின் லோகோவையே மாற்றி அதிரடி காட்டியுள்ளார் எலான் மஸ்க்.

ருவிற்றரின் லோகோவை ஏன் மாற்றினார் என்பதற்கும் எலான் மஸ்க் தனது ருவிற்றர் பக்கத்திலேயே விளக்கமளித்துள்ளார்.

முன்னர் ஒரு பயனர் தன்னிடம் ருவிற்றர் லோகோவை 2 'Doge' படமாக மாற்றக் கூறியதால் தான் மாற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார். கடந்த மார்ச் மாதம் இந்த உரையாடல் நடந்துள்ளது. அப்போது அந்தப் பயனருக்கு எலான் மஸ்க், லோகோவை மாற்றுவதாக உறுதியளித்துள்ளார். அதன்படியே தற்போது நீல குருவிக்குப் பதிலாக னுழபநஉழமை லோகோவான நாய் படத்தை மாற்றியுள்ளதாகக் கூறியுள்ளார்.

எலான் மஸ்க்கின் இந்த நடவடிக்கையால் 'Dogecoin' எனப்படும் க்ரிப்டோகரென்சி நிறுவனத்தின் பங்குகள் 20 வீதம் உயர்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நாய் ஜப்பான் நாட்டின் ஷிபு வகை நாயாகும். இது பிரபல Dogecoin கிரிப்டோகரன்ஸியின் லோகோவாகும். இந்த லோகோ அந்த நிறுவனத்தால் 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. பிட்கொயின் உள்ளிட்ட பிற கிரிப்டோகரன்ஸிகளைப் பகடி செய்வதற்காக இந்த லோகோ உருவாக்கப்பட்டது.

இந்நிலையில் எலான் மஸ்க் ருவிற்றரில் ஒரு மீமையும் பகிர்ந்துள்ளார். அதில் ஒரு காரில் ஷிபா வகை நாய் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்துள்ளது. ஒரு பொலிஸ் அதிகாரி அதனிடம் லைசன்ஸை பரிசோதிக்கிறார். அதில் நீலக் குருவி படம் இருக்க நாய் அது பழைய படம் என்று விளக்குவது போல் உள்ளது.

(அ)

# நீதிமன்றில் ஆஜராவதற்கு நியூயோர்க் வந்தார் ட்ரம்ப்

நியூயோர்க், ஏப். 05

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக நியூயோர்க் நகரத்துக்கு வந்துள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஆபாச நட்சத்திரத்துக்கு பணம் கொடுத்தமை தொடர்பாக அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

எனினும், இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ள ட்ரம்ப், கிரிமினல் விசாரணைக்கு உட்படுத்தப் பட்ட முதல் முன்னாள் ஜனாதி பதி என்ற அவப்பெயரை பெற்றுள்ளார்.

நியூயோர்க் அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டங்களை எதிர்பார்க்கும் நிலையில், அங்கு கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸ்துறை மற்றும் நீதிமன்ற அதிகாரிகள் மற்றும் இரகசிய சேவை முகவர்கள் 76 வயதான ட்ரம்ப்பை நியூயோர்க் வழியாக லோயர் மன்ஹற்றன் நீதிமன்ற வளாகத்திற்கு அழைத்துச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளூர் நேரப்படி 14:15 மணிக்கு திட்டமிடப்பட்ட விசாரணையில் அவர் எதிர்கொள்ளும் குற்றச்சாட்டுகள் முழுமையாக வெளிப்படுத்தப்படும். அவர் குற்றமற்றவர் என அவரது வழக்கறிஞர்கள் ஏற்கனவே கூறிவிட்டனர்.

(அ)

## ஐ. பி. எல். இருபது - 20

# 12 ஓட்டங்களால் லக்னோவை வெற்றி கொண்டது சென்னை!

சென்னை, ஏப். 05

ஐ. பி. எல். இருபது 20 கிரிக்கெட் தொடரில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது சென்னை சுப்பர் கிங்ஸ் (சி. எஸ். கே.) அணி.



சென்னை சேப்பாக்கம் எம். ஏ. சிதம்பரம் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற லக்னோ அணியின் தலைவர் கே. எல். ராகுல் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

துடுப்பெடுத்தாடித் தொடங்கிய சிஎஸ்கேவுக்கு ருதுராஜ் கெய்க்வாட், டெவன் கொன்வே இணை அதிரடி தொடக்கம் கொடுத்தது. ஆவேஷ் கான் வீசிய 2வது ஓவரில் 2 பௌண்ட்ரிகள் உட்பட 17 ஓட்டங்கள் விளாசப்பட்டன.

இந்த ஜோடியின் அதிரடியால் 8 ஓவர்களில் சென்னை 100 ஓட்டங்களை எட்டியது. 10ஆவது ஓவரை வீசிய ரவி பிஷ்னோய் இந்த இணையைப் பிரித்தார். அவர் வீசிய பந்தில் ருதுராஜ், மார்க் வூட்டிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார். ருதுராஜ் 31 பந்துகளை சந்தித்து 4 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 57 ஓட்டங்கள் எடுத்தார். மார்க் வூட் வீசிய அடுத்த ஓவரில் டெவன் கொன்வே, குர்ணல் பாண்ட்யாவிடம் பிடிகொடுத்து வெளியேறினார். கொன்வே 29 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 47ஓட்டங்கள் சேர்த்தார்.

இதையடுத்து களமிறங்கிய ஷிவம் துபே 16 பந்துகளில், 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 27 ஓட்டங்கள் விளாசிய நிலையில் ரவி பிஷ்னோய் பந்தில் வெளியேறினார். அவரைத் தொடர்ந்து மொயின் அலி 13 பந்துகளில், 3 பௌண்ட்ரிகளுடன் 19 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரவி பிஷ்னோய் பந்தில் ஆட்டமிழந்தார். மற்றொரு சகலதுறை வீரரான பென் ஸ்டோக்ஸ் 8 பந்துகளில் 8 ஓட்டங்கள் எடுத்து ஆவேஷ் கான் பந்தில் நடையை கட்டினார்.

இறுதிக்கட்டத்தில் அம்பதி ராயுடு மட்டையை சுழற்றினார். மார்க் வூட் வீசிய 18ஆவது ஓவரில் 2 சிக்ஸர்களை விளாசினார் அம்பதி ராயுடு. ரவீந்திர ஜடேஜா 3 ஓட்டங்கள் சேர்த்து வீழ்ந்தார். இதையடுத்து களமிறங்கிய டோனி, தான் சந்தித்த முதல் 2 பந்துகளையும் சிக்ஸர்களுக்கு பறக்கவிட்ட நிலையில் 3ஆவது பந்தில் ஆட்டமிழந்தார். 20 ஓவர்களில் முடிவில் சென்னை 7 விக்கெட்கள் இழப்புக்கு 217 ஓட்டங்கள் குவித்தது. அம்பதி ராயுடு 27 ஓட்டங்களும், மிட்செல் சாண்ட்னர் ஓர் ஓட்டமும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

218 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணிக்கு கைல் மேயர்ஸ் அதிரடி தொடக்கம் கொடுத்தார். 22 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 8 பௌண்ட்ரிகளுடன் 53 ஓட்டங்கள் விளாசிய நிலையில் மொயின் அலி பந்தில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் அந்த அணி சீரான இடைவெளியில் விக்கெட்டை பறிகொடுத்தது. தீபக் ஹூடா 2, கே. எல். ராகுல் 20, குர்ணல் பாண்ட்யா 9, மார்கஸ் ஸ்ரொய்னிஸ் 21 ஓட்டங்களில் அடுத்தடுத்து வெளியேறினர். நிக்கோலஸ் பூரன் 32 ஓட்டங்களில் வீழ்ந்தார்.

இதன் பின்னர் பதோனி, கிருஷ்ணப்பா கௌதம் ஜோடி போராடியது. தீபக் ஷாகர் வீசிய 17வது ஓவரில் கிருஷ்ணப்பா கௌதம் சிக்ஸர் விளாச 18 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டது. தேஷ்பா ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்தார். 12 பந்துகளில் 37 ஓட்டங்கள் தேவையாக இருந்தது.

ஹங்கர்கேகர் வீசிய 19ஆவது ஓவரில் 9 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். கடைசி ஓவரில் வெற்றிக்கு 28 ஓட்டங்கள் தேவையாக இருந்தன. முதல் பந்தை அகலப் பந்தாகவும் அடுத்த பந்தை முறையற்ற பந்தாகவும் தேஷ்பாண்டே வீச ஆட்டத்தில் பரபரப்பு அதிகமானது. 3ஆவது பந்தில் ஆயுஷ் பதோனி (23 ஓட்டங்கள்), டோனியிடம் பிடி கொடுத்து வெளியேறினார். 20 ஓவர்கள் முடிவில் லக்னோ அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 205 ஓட்டங்கள் எடுத்து தோல்வி அடைந்தது. கிருஷ்ணப்பா 17, மார்க்வூட் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற சென்னை அணி இந்தத் தொடரில் முதல் வெற்றியை பதிவு செய்தது. மொயின் அலி 4 ஓவர்களை வீசி 26 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்கள் வீழ்த்தினார். (ஐ)



# ஐ. பி. எல். ரி-20 அரங்கில் டோனி 5,000 ஓட்டங்கள்!

சென்னை, ஏப். 05

இந்தியன் பிறீமியர் லீக்கில் 5 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை டோனி எட்டியுள்ளார்.

லக்னோவுக்கு எதிரான போட்டியில் டோனி 3 பந்துகளில் 2 சிக்ஸர்களை விளாசி 12 ஓட்டங்களை எடுத்தார். இதன் மூலம் டோனி 5 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார்.

ஐ. பி. எல். தொடரில் 236 போட்டிகளில் விளையாடியுள்ள டோனி 5004 ஓட்டங்கள் குவித்துள்ளார். மைல்கல் சாதனையை 20ஆவது ஓவரின் 2ஆவது பந்தில் எட்டினார் டோனி. இந்த சாதனையை படைத்துள்ள 5ஆவது வீரர் டோனி ஆவார்.

இதற்கு முன்னர் விராட் கோலி, ஷிகர் தவான், ரோஹித் சர்மா, சுரேஷ் ரெய்னா ஆகியோர் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளனர். வெளிநாட்டு வீரர்களில் வோர்ணர், டி வில்லியர்ஸ் ஆகியோரும் 5,000 ஓட்டங்களை கடந்துள்ளனர். (ஐ)



# புதிய தலைவரின்கீழ் சென்னை விளையாட வேண்டியேற்படும்!

## டோனி இப்படி எச்சரிக்கை

சென்னை, ஏப். 05

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பந்து வீச்சாளர்களில் சிலர் அதிகம் உதிரிகளை வீசி வருகின்றனர். அதுவும் அகலப்பந்து மற்றும் முறையற்ற பந்து என இந்தப் பட்டியல் நீள்கிறது. நடப்பு சீசனில் இதுவரைில் இரண்டு போட்டிகளில் விளையாடியுள்ள சென்னை அணி மொத்தம் 30 ஓட்டங்களை உதிரிகளாகக் கொடுத்துள்ளது.

லக்னோ அணியுடனான போட்டியில் மட்டும் 18 ஓட்டங்களை சென்னை அணி உதிரிகளாக வீசி இருந்தது. இந்தப் போட்டியில் 3 முறையற்ற பந்து 13 அகலப் பந்து மற்றும் 2 ஓட்டங்களை லெக்வைஸாகவும் சென்னை வீசியது.

இந்நிலையில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி அது குறித்து வெளிப்படையாகப் பேசியுள்ளார். லக்னோ உடனான போட்டியில் வெற்றி பெற்ற பிறகு அவர் இதனை தெரிவித்திருந்தார்.

“வேகப்பந்து வீச்சு பிரிவில் நாங்கள் கொஞ்சம் எங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. கட்டுப்பாட்டுக்கு ஏற்ப பந்து வீச வேண்டும். எதிரணி பந்துவீச்சாளர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அதே போல பந்துவீச்சாளர்கள் முறையற்ற பந்து அல்லது அகலப்பந்தை வீசக்கூடாது. அப்படி இல்லை என்றால் அவர்கள் புதிய தலைவரின் கீழ் விளையாட தயாராக இருக்க வேண்டும். ஏனெனில், இது எனக்கான இரண்டாவது எச்சரிக்கை” என்றார்.

சென்னை அணி பந்துவீச்சாளர்கள் நடப்பு தொடரில் அதிக உதிரிகளை வீசுவதனால் அணித் தலைவர் டோனிக்கு மெதுவாக பந்து வீசியதற்கான எச்சரிக்கை, அபராதம் விதிக்கப்படுகிறது. ஒரே தொடரில் ஓர் அணிக்கு இந்த எச்சரிக்கை மூன்று முறை கொடுக்கப்பட்டால் அந்த அணியின் தலைவர் ஒரு போட்டியில் விளையாட தடை செய்யப்படுவார். அதைத்தான் டோனி சொல்லியுள்ளார்.

# நோவக் ஜொகோவிச் மீண்டும் முதலிடத்தில்!

லண்டன், ஏப். 05

ரென்னிஸ் தரவரிசையில் நோவக் ஜொகோவிச் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

இதன்படி, வீரர், வீராங்கனைகளின் புதிய தரவரிசைப்பட்டியலை சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் வெளியிட்டது.

இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சேர்பியா வீரர் நோவக் ஜொகோவிச் (7,160 புள்ளி) மீண்டும் முதலிடத்தை பிடித்தார்.

மியாமி ஓப்பனில் அரையிறுதியில் தோல்வி கண்டதன் மூலம் ஸ்பெயின் வீரர் கார்லஸ் அல்காரஸ் (6,780 புள்ளி) முதலிடத்தை இழந்தார். அவர் 2ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் 3ஆவது இடத்தில் நீடிக்கிறார்.



மியாமி ஓப்பன் பட்டத்தை வென்ற மெத்வதேவ் ஓர் இடம் உயர்ந்து 4ஆவது இடத்தை பிடித்துள்ளார். இறுதி சுற்றில் தோல்வி கண்ட இத்தாலி வீரர் ஜானிக் சின்னர் 2 இடம் அதிகரித்து 9ஆவது இடத்தையும் பிடித்தனர்.



# பாகிஸ்தானுடனான தொடர் நியூசி. தலைவராக லதாம்!

வெலிங்டன், ஏப். 05

சொந்த மண்ணில் இலங்கைக்கு எதிராக இருபது - 20 போட்டிகளில் ஆடி வருகிறது நியூசிலாந்து. இந்தத் தொடர் முடிவடைந்தது. பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் சென்று அங்கு 5 இருபது -20, 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கான நியூசிலாந்து அணியை அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் வரும் 14ஆம் திகதி தொடங்கவுள்ளது. தற்போது ஐ. பி. எல். தொடரும் நடைபெற்று வருவதால் ஐ. பி. எல்லில் பங்கேற்கும் நியூசிலாந்து வீரர்கள் இடம்பெறவில்லை.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான நியூசிலாந்து அணியை ரொம் லதாம் வழிநடத்துகிறார்.

அணி விவரம்: ரொம் லதாம் (தலைவர்), ரொம் பிளெண்டல், சாட் போவ்ஸ், மேட் ஹென்றி, பென் லிஸ்டர், கோல் மெக்கோஞ்சி, அடம் மில்னே, டேரில் மிட்செல், ஜிம்மி நீஷம், ஹென்றி நிக்கோல்ஸ், ரச்சின் ரவீந்திரா, ஹென்றி ஷிப்லி, இஷ் சோதி, பிளெய்ர் டிக்னர், வில் யங்.





# கலாசாலையில் இடம்பெற்ற நாடக நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 05

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நாடகத் துறை விரிவுரையாளர் சந்திரிகா தர்மரட்ணம் எழுதிய கூடி வாழ்வோம் என்ற நாடக நூலின் வெளியீட்டு விழா கடந்த திங்கள் பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாசாலையின் முன்னாள் அதிபர் வீரகத்தி கருணலிங்கமும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் கை. திலகநாதனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் அ.பௌநந்தி வழங்கினார். நூல் நயப்புரையை யாழ் கல்வி வலய நாடகத் துறை ஆசிரிய ஆலோசகர் யோ. யோண்சன் ராஜ்குமார் ஆற்றினார்.

நூலை கலாசாலை அதிபர் வெளியிட்டு வைக்க அதன் முதற்பிரதியை ஓய்வு நிலை விரிவுரையாளர் வ.சி. குணசீலன் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் கலாசாலைச் .சமூகத்தவர் மற்றும் நாடகத்துறை சார்ந்த ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

## பொலிஸ் ஜீப்பில் எழுதியவரை கைது செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஏப். 05

ஜா-அல பொலிஸ் நிலையத்தின் வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொலிஸ் ஜீப்பில் ஆபாச வார்த்தைகளை எழுதியதாகக் கூறப்படும் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைது செய்யத் தேடப்பட்டு வரும் இந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் தற்போது பணிக்கு வராமல் தலைமறைவாக உள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிஸ் ஜீப்பில் ஆபாசமான வார்த்தைகள் எழுதப்பட்டதையடுத்து, ஜா எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் கைரேகைகள் பெறப்பட்டு, ஜீப்பில் இருந்த கைரேகைகளும் பெறப்பட்டு, ஆராயப்பட்டது.

பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் கைரேகைகள் மற்றும் ஜீப்பில் இருந்து மீட்கப்பட்ட கைரேகைகள் ஒன்றுக்கொன்று ஒத்ததாக காணப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

கைரேகை அறிக்கை உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கைரேகை அறிக்கை கிடைத்ததையடுத்து, சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் தலைமைப் பொலிஸ் பரிசோதகரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

# நாட்டை மீட்க எதிரணி அரசுடன் இணையலாம்

## கதவு திறந்தே உள்ளது என்கிறார் ரணில்

கொழும்பு, ஏப். 05

**“அரசின் கதவு எந்நேரமும் திறந்தேயுள்ளது. அரசுடன் எவரும் இணையலாம்.”**

**இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து சிலர் அரசு பக்கம் தாவவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, இது புனைகதை என்றும், பணத்தையும் பதவியையும் கொடுத்து சிலரை வாங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார் என்றும் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தநிலையில் மேற்படி விடயம் தொடர்பில் ஜனாதிபதி கருத்துரைக்கும்போது,

கட்சி அரசியலுக்கு அப்பால் நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி செயற்பட விரும்பும் எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணையலாம்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நாம் நிறைவேற்ற பாராளுமன்றத்தில் உறுப்பினர்களுக்கிடையில் ஒற்றுமை மிகவும் அவசியம்.

இது கட்சியை வளர்க்கும் நேரமல்ல. நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் நேரம்.

எனவே, எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து நாட்டுக்காகச் செயற்படவேண்டும்.

கடந்த காலங்களில் நடந்தது போல் கோடி ரூபா , அமைச்சுப் பதவிகள், சலுகைகள் வழங்கி எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை இந்த அரசு விலைக்கு வாங்கமாட்டாது-என்றார்.

# பண்டிகை காலத்தில் மக்களே அவதானம்!

கொழும்பு, ஏப். 05

பண்டிகைக் காலங்களில் சந்தையில் பொருட்களை கொள்வனவு செய்யும் போது மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸ் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

விற்பனையாளர்கள் காலாவதியான பொருட்களை கொண்டு வந்து நகரங்களில் விற்பனை செய்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மோசடியாளர்கள், காலாவதியான பொருட்களை மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்யக்கூடும்.

எனவே, பொதுமக்கள் பொருட்களை கொள்வனவு செய்யும் போது, அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸ் பேச்சாளர் அறிவுறுத்தினார். (அ)

## வசந்த முதலிகேயை கைது செய்வதற்கு மீளாய்வு மனு தாக்கல் செய்யவில்லை

### சட்டமா அதிபர் திணைக்களம்

கொழும்பு, ஏப். 05

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேக்கு எதிரான மனு, சட்ட பிழையை திருத்துவதற்காகவே நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும், அவரை கைது செய்வதற்கு அல்ல எனவும் சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகேயை விடுதலை செய்யுமாறு கொழும்பு நீதவான் வழங்கிய உத்தரவை மீளாய்வு செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு, கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோதே, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலான் ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த மனு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஸங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பிரதிவாதியான வசந்த முதலிகே நீதிமன்றில் ஆஜரானார். சட்ட பிழையை திருத்திக் கொள்வதற்காக மாத்திரமே இந்த மனுவை அழைக்குமாறு கோரப்பட்டதாகவும், அவரை கைது செய்யக் கோரவில்லை என்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலான் ரத்நாயக்க நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

இதன்படி, ஜூன் முதலாம் திகதி வழக்கு தொடர்பான எழுத்துமூல சமர்ப்பணங்களை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வசந்த முதலிகேக்கு எதிராக போதிய சாட்சியங்கள் இல்லையென தெரிவித்து, அவரை விடுதலை செய்ய கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டதை எதிர்த்து, சட்டமா அதிபர், கொழும்பு மேல் நீதிமன்றில் இந்த சீராய்வு மனுவை தாக்கல் செய்தார்.

அவரை விடுவிப்பதற்கான கொழும்பு பிரதான நீதவான் தீர்மானம் சட்டத்திற்கு முரணானது எனவும் அதனை மீளாய்வு செய்யுமாறும் கோரி சட்டமா அதிபர் இந்த மேன்முறையீட்டை தாக்கல் செய்தார். (அ)

# மகளுக்கு பூப்புனித நீராட்டு விழா நடத்த ஜேர்மனியிலிருந்து வந்த பெண் விபத்தில் பலி!

முல்லைத்தீவு, ஏப். 05

முல்லைத்தீவு மாவட்டத்தில் அளம்பில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வெளிநாட்டில் இருந்து வந்த குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண்ணும், ஜேர்மனியில் வசிக்கும் தம்பியும் மோட்டார் சைக்கிளில் சிலாவத்தைப் பகுதியில் இருந்து கொக்குளாய் செல்லும்போது, அளம்பில் பகுதியில் வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்பட்டுள்ளது. இறால் வாங்க அவர்கள் சென்றுள்ளனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த குறித்த வெளிநாட்டுப் பெண் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றையவர் காயமடைந்த நிலையில் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தின் போது சிலாவத்தைப் பகுதியைச் சேர்ந்த ஜேர்மனியில் வசித்துவரும் 42 வயதுடைய சிறீதர் ஜெனிற்றா என்ற குடும்பப் பெண் உயிரிழந்துள்ளார்.




இவர் வெளிநாட்டில் இருந்து தனது மகளுக்கு பூப்புனித நீராட்டு விழா செய்வதற்காக சொந்த இடமான சிலாவத்தைக்கு வந்துள்ள நிலையில் இந்த பரிதாபம் இடம்பெற்றுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# ஆயிரத்து 290 ரூபாவினால் குறைந்த லாப்ஸ் எரிவாயு

கொழும்பு, ஏப். 05

நேற்று நள்ளிரவு முதல் எரிவாயுவின் விலையை குறைக்க லாப்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 1,290 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 3,990 ரூபாவாகும்.

இதேவேளை, 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 516 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1,596 ரூபாவாகும். (அ)

# லிட்ரோ எரிவாயுவின் புதிய விலை அறிவிப்பு

கொழும்பு, ஏப். 05

12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை ஆயிரத்து 5 ரூபாவால் குறைக்கப்படுவதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் விலை குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் புதிய விலை 3 ஆயிரத்து 738 ரூபாவாகும்.

அதேநேரம், 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 402 ரூபாவால் குறைக்கப்படுகின்றது.

இதன்படி அதன் புதிய விலை ஆயிரத்து 502 ரூபா என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார்.

இதுதவிர 2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 183 ரூபாவினால் குறைக்கப்பட்டு, 700 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது. (அ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 02 . 1940



இறப்பு 02 . 04 . 2023

### சுப்பையா சிவசுப்பிரமணியம்

அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். துன்னாலை மத்தி கோவிற்கடவையை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா சிவசுப்பிரமணியம் கடந்த 02-04-2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், சுப்பையா - அருளம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருப்பதி, புவனேஸ்வரி, ஈஸ்வரபாதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வைதேகி, செந்தூரன், செங்கோடன், அனுசியா(அம்முலு), பகீரதி, செந்தில்குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரகலாதன்(பிரபு), உபேந்திரி, சுமதி, மாதவன், தியாகலிங்கம், தாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவன், சரண்யன், அகல்யா, டெனித், லதுசன், நிவேதிதா, வைஷ்ணவி, ஆகாஸ், கிருஸ்ஸா, கார்த்திக், லஷ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை எதிர்வரும் 09.04.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 12.30 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

# யாழ். போதனா வைத்தியசாலையின் கழிவுகளைஎரிக்கஇடமளித்தசிவபூமி

யாழ்ப்பாணம், ஏப். 05

**யாழ். போதனா வைத்தியசாலையின் கழிவுகளைத் தகனம் செய்வதற்குச் சிவபூமி அறக்கட்டளையினர் காணியை வழங்கியுள்ளதாக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.**

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் ஓவியக் கண்காட்சியில் கலந்துகொண்ட பின்னர் விருந்தினர் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். போதனா வைத்தியசாலையில், மனித உடல்களிலிருந்து எடுக்கப்படும் அவையங்கள் மற்றும் வேறு கழிவுகளை எரிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் பல இடங்களைத் தெரிவுசெய்திருந்தபோதும் அதற்கான இடங்கள் எவையும் வழங்கப்படவில்லை.

ஆகையால் அந்தக் கழிவுகளை குருநாகலில் தகனம் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது வைத்தியசாலையானது மிகுந்த நிதி நெருக்கடிகளிலும் மருந்து தட்டுப்பாடுகளிலும் உள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் குறித்த கழிவுகளை எடுத்துச் செல்வதற்கு அதிகப் பணச் செலவு ஏற்படும். ஆகையால் எங்களது சிவபூமி அறக்கட்டளையின் ஒரு பகுதி காணியை இதற்காக வழங்கியுள்ளோம்.

மனித உடலிலிருந்து எடுக்கப்படும் அவையங்களை எரிக்க வேண்டும். இந்த 21ஆவது நூற்றாண்டிலும், அதற்காகத் தெரிவு செய்யப்படும் இடங்களில் அந்தப் பணிகளை முன்னெடுக்கவிடாதது என்பது வேதனையை ஏற்படுத்துகிறது - என்றார். (அ)

# வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு நேற்று முதல் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 05

புத்தாண்டு பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நேற்று நள்ளிரவு முதல் தற்போதைய எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி, ஓட்டோக்களுக்கு 5லீற்றரில் இருந்து 8 லீற்றராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களுக்கு 4 லீற்றரில் இருந்து 7லீற்றராகவும், பஸ்களுக்கு 40 லீற்றரில் இருந்து 60 லீற்றராகவும், கார்களுக்கு 20 லீற்றரில் இருந்து 30 லீற்ற ராகவும், லொறிகளுக்கு 50 லீற்றரில் இருந்து 75 லீற்றரா கவும் சிறப்பு நோக்க வாகனங்களுக்கு 20 லீற்றரில் இருந்து 30 லீற்றராகவும் வான்களுக்கு 20 லீற்றரில் இருந்து 30 லீற்றராகவும் எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

# சர்வதேச மன்னிப்புச் சபையினர் சஜித் பிரேமதாஸவுடன் சந்திப்பு





கொழும்பு, ஏப். 05

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையினர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்துள்ளனர்.

இந்த சந்திப்பு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் சிரேஷ்ட பணிப்பாளர் டெப்ரோஸ் முச்சினா, தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் யாமினி மிஷ்ரா, ரெஹாபி மஹ்மூர், தியாகி ருவன் பத்திரன, பாபுராம் பாண்டி உள்ளிட்ட குழுவினரே சஜித்தைச் சந்தித்துள்ளனர்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான அறிக்கையும் சிரேஷ்ட பணிப்பாளரால் எதிர்க்கட்சித் தலைவரிடம் இதன்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மூன்று மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, ஏப். 03

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையை கருத்தில் கொண்டு, மூன்று மாவட்டங்களுக்கு மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கண்டி, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அபாய எச்சரிக்கை, இன்று மாலை 5 மணிவரை அமுலில் இருக்கும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது. (அ)

# பண்டிகைக் காலத்தில் வர்த்தகர்களை கைது செய்வதற்கு விசேட நடவடிக்கை

கொழும்பு, ஏப். 05

பண்டிகைக் காலத்தில் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக வர்த்தக அமைச்சு கடும் நடவடிக்கை எடுக்கும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வர்த்தக அமைச்சு , நுகர்வோர் விவகாரங்கள் ஆணையம், அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் ஆகியவை இணைந்து கட்டுப்படுத்தப்பட்ட அல்லது அதிகபட்ச சில்லறை விலைக்கு அதிகமாக பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களை சோதனையிட நாளை வியாழக்கிழமை முதல் கூட்டுத் திட்டத்தை செயற்படுத்தவுள்ளதாக அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

விலை குறையும் போது பொருட்களின் விலைகள் குறைக்கப்படாது அதேசமயம் விலைகள் அதிகரித்தவுடன் விலைகள் அதிகரிக்கப்படுவது கடந்த காலத்திலிருந்து நடைமுறையில் உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார் .

டீசல் மற்றும் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே பொருட்களின் விலைகளும் குறையவேண்டும்.

நாட்டில் பற்றாக்குறையாக இருந்த பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தயங்கப் போவதில்லை என தெரிவித்த அமைச்சர், நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்ட போது அரிசி இறக்குமதி செய்யப்பட்டதாகவும் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.